


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிஷேக மலர்
# 2015



## கந்தளாய்
## கட்டளைப் பிள்ளையார் கோயில்
## 01.05.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான ஆதீனகர்த்தா, பிரதமகுரு "வேதாகமமாமணி" சோ. இரவிச்சந்திரக்குருக்கள் அவர்களின்

## ஆசியுரை

கந்தளாய் பிள்ளையார் கோவில் திருக்கோணமலை என்னும் புண்ணிய பூமியில் கந்தளாய் என்கின்ற திருப்பதியில் எழுந்தரு அருள்பாலித்துக் கொண்டிருக்கும் தெய்வம், பிள்ளையார் என்னும் நாமம் பெற்றவர்.

குளக்கோட்ட மன்னன் வழிபட்டு வரம் பெற்ற கோவில் என்பது வரலாற்று பதிவாகும். மேற்படி கோவில் புனருத்தாரணம் செய்யப்பட்டு திருப்பணிகள் யாவும் பூரத்தியாகி கும்பாபிஷேகம் நிகழவிருப்பது சைவ சமயத்திற்கு பெரும் எழுச்சியை கொடுக்கும் என்பதில் ஐயம்மில்லை.

கந்தளாய் பிள்ளையார் கோவில் கும்பாபிஷேகம் இனிதே நிகழ வாழ்த்துவதுடன் எனது நல்லாசிகளையும் வழங்குகிறேன்.

மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்!

இவ்வண்ணம்
சோ. இரவிச்சந்தரக் குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தளாய் ஆலயக் குருக்கள் அவர்களின் ஆசிச் செய்தி

பூமாது செர பொற்புமிகு செல்வம்
பொழிற் தொங்க நாமாது நாவில்
நடனம் புரிய நலம் பெருக ஆமவும்
பாலும் மோதகமும் தேனுமாய் நின்றருள்செய்
குளக் கோட்டுப்பதி கட்டளை விநாயகரே.

வணக்கம்

கட்டளை விநாயகப் பெருமானின் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு இவ்வுலகிற்கு அனைத்து வழிகளிலும் உதவி நல்கிய ஆலய பரிபாலனசபையினர் உட்பட அனைத்து விநாயகப் பெருமானுடைய அடியவர்கட்கும் அனைத்து செல்வங்களும் பெற்று சீரும் சிறப்புமாய் வாழ விநாயகப் பெருமானை பிராத்திக்கின்றோம்.

சுபம்அஸ்து

இவ்வண்ணம்
சிவஸ்ரீ. S. செல்வராஜாக்குருக்கள்
ஆலய நித்தியகுரு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தளாய் ஆலயப் போசகர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

சிவபூமி என திருமூலர்களால் போற்றப்படும் சந்தணமும், அதிற் கட்டைகளும் கரை ஒதுங்கும் கோணமாமலை அமர்ந்தருளும், திருக்கோணமலை மாவட்டத்தின் தெற்கே அமைந்துள்ள பழம்பெரும் விநாயகர் ஆலயமான "குளக்கோட்டுப்பதி விநாயகர் ஆலயத்தின்" திருக்குடமுழுக்கு வைபவம் எம் பெருமான் துணையால் நிகழ்ந்தேறுவதையிட்டு அளவில்லா ஆனந்தம் அடைகின்றேன்.

புராதன வரலாற்றுப் பின்னணி பலவற்றைக் கொண்டுள்ள இப்பிரதேசத்தில் அமையப்பட்டுள்ள கந்தளாய்க் குளத்தை அண்டிய பகுதியில் தமிழ் மக்களின் குடியிருப்புக்கள் அமையப் பெற்றமை எம் பெருமான் துணையே! வயலும் வயல் சார்ந்த இடமும் இம் மருத நில மண்ணிலே வீற்றிருந்து அருள் பாலிக்கும் எம்பெருமான் விநாயகர் இவ்வாலய சூழ் அடியார்களைப் பாதுகாத்து சகல சித்திகளையும் வழங்கிக் கொண்டிருப்பதோடு செல்வங்களையும் வாரி வழங்கிக் கொண்டிருக்கின்றார்.

1986ம் ஆண்டு சித்திரை மாதம் 20ம் திகதி நடைபெற்ற மிகவும் துக்ககரமான கந்தளாய் குள உடைப்பின் நிமித்தம் இவ்வாலயம் அமைந்திருந்த புராதன கோயில் கிராமம் உட்பட சகலதும் முற்றாக அழிவடைந்ததுடன், 64 உயிர்களையும் காவுகொண்டதை யாவரும் அறிந்ததே. அதன் பின் அனைவரினதும் அயராத பங்களிப்பினால் புது ஆலயம் கட்டப்பட்டு 06.09.1999ல் திருகுடமுழுக்கு கண்ட எம்பெருமான் ஆலயம்,12 வருடங்களுக்குப் பின் திருக்குட முழுக்கு செய்ய உத்தேசித்திருந்தும், இவ்வாலயத்தில் செய்ய வேண்டிய பாரிய திருத்த வேலைகள் காரணமாக உரிய காலத்தில் திருகுடமுழுக்கு செய்ய முடியாமல் போனது வருத்தத்திற்குரியதே. எவ்வாறாயினும் சகலரினதும் இன, மதம் பாராத பங்களிப்போடும், ஆலய அறங்காவல் சபை மேற்கொண்ட தீவிரமான முயற்சியின் பலனாகவும், கணிசமான அளவு நிர்மாணப் பணிகள் நிறைவு பெற்றுள்ளது விசேட அம்சமாகும். மேலும் இத்திருத்தப் பணிகளுக்கு பல்வேறு வகைகளிலும் உதவிய ஒவ்வொரு அன்பர்களையும் மனமுவந்து பாராட்டுவதுடன் எனது உள்ளம் சார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பகுதி வாழ் இந்து அடியார்களும், நம் சகோதர இன மக்களையும் மதித்து ஒற்றுமையாக, நம் இந்துப் பண்பாட்டைப் பேணி சிறப்புடன் வாழ வேண்டுமென்பதோடு, எம் பெருமான் ஆலயம், மென்மேலும் பல வழிகளிலும் வளர்ச்சி கண்டு மிளிர எல்லாம் வல்ல நம் விநாயகரின் நல் அருள் வேண்டி வாழ்த்தி விடை பெறுகிறேன்.

நன்றி

"எவ்வினை வேர் அறுக்கும் விநாயகனே - போற்றி
எவ்வினை நேரினும் நலம் தரும் வேழனே - போற்றி"

அன்புடன்
வல்லிபுரம் இரத்தினசபாபதி லோகானந்தம்
போசகர், விநாயகர் ஆலயம்
கந்தளாய்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தளாய் ஆலய பரிபாலனசபை தலைவர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

திருமூலரால் 'சிவபூமி' யெனும் திருநாமம் பெறும் ஈழமண்டல நாட்டின் கிழக்குப் பகுதி மிகவும் சிறப்புற்று விளங்கும் திருக்கோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள பொன்னகரும் புனித பூமியுமே கந்தளாயாகும். வயலோடு வசந்தம் வீசும் கந்தளாயின் தொன்மையும், பெருமையும் முக்காலத்திற்கும் உரியனவாகும். குளக்கோட்டன் எனப்படும் சோழ மன்னனின் நற்கருமங்களின் பேறாக குளமும், கோட்டமும் சூழ பொன், நெல், வயல் வெளிகளும், வாழ்வும், வளமுமாக மக்கள் இன்புற்று வாழ்ந்த கந்தளாயில் குளக்கோட்டுப்பதி கட்டளைக் கணபதியின் பெருங் கருணையின் சித்தமும் செழிப்புற்று இருந்தமையே வரலாறு கூறும் உண்மைகளாகும். தள்ளுவன தள்ளி கொள்ளுவன கெள்ளுவன கொண்டு இன்முகம் காட்டி நன்மொழி பேசி வருந்தி வந்தோர்க்கெல்லாம் விருந்தும் பொருந்தும் கொடையுமாக பண்பட்ட சமூதாயம் வாழ்ந்து வந்தமைக்கும் வாழ்ந்து வருகின்றமைக்கும் சித்தி விநாயகனின் பெருங் கருணைத் திறமே வரமாகும். கடந்த காலங்களில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளின் போது எத்தனை எத்தனை இடம் பெயர்வுகள், உயிர் இழப்புக்கள், உடமை இழப்புக்கள் ஆனாலும் கந்தளாய்ப் பிள்ளையாரின் ஒப்பற்ற கருணையினால் இங்கு வாழும் மக்கள் பெருமளவு பாதுகாக்கப்பட்டனர். இங்கு வாழும் இந்து பெருமக்கள் மட்டுமன்றி பௌத்த மதத்தவர்களும் எம்பெருமானின் மீது அதீத நம்பிக்கை கொண்டு வழிபாடு செய்வது தான் மிகவும் சிறப்பான அம்சமாகும். வயல் தோட்டங்களின் அறுவடையின் முன்னும், காட்டு விலங்குகளின் அட்டகாசங்களிலிருந்து விடுபட வேண்டியும், கல்விசார் பரீட்சைகளின் போதும் பௌத்த இந்து மக்கள் முதலில் கந்தளாய்ப் பிள்ளையாரை வழிபட்ட பின்பே காரியங்களைத் தொடங்குவர். இதனால் அவர்கள் நம்பிக்கையோடு மேற்கொள்ளும் எந்தவொரு முயற்சியும் வெற்றி அளிக்கின்றது. இது மாத்திரமன்றி இரண்டு மதங்களுக்கிடையேயும் அன்பையும், ஒற்றுமையையும் வலுப்படுத் துகின்றது. பிரணவ சொரூபியும், யானை முகமும், நான்கு கைகளும், பெரும் வயிறும் கொண்ட தேவனான குளக்கட்டுப்பதி கந்தளாய்ப் பிள்ளையார் ஆலய புனருத்தாபனம் செய்யப்பட்டு இன்று மஹாகும்பாபிஷேகத்தினை காண்கின்றது. குடமுழுக்கு காணும் குளக்கோட்டன் காலத்து கந்தளாய்ப் பிள்ளையார் ஆலய கும்பாபிஷேக திருப்பணிக்கு எம்முடன் அயராது முன்னின்று உழைத்த அனைத்து உள்ளங்களையும், பாராட்டுக்களையும் இந்து தருணத்தில் பகிர்ந்து கொள்ளுகின்றேன். சித்தி விநாயகனின் நித்திய கருணையும் கடாட்சமும் அனைவருக்கும் என்றும் கிடைக்க வேண்டி வாழ்த்துச் செய்தியை நிறைவு செய்கின்றேன்.

T. பாக்கியராஜா

தலைவர், கந்தளாய்ப் பிள்ளையார்

ஆலய பரிபாலன சபை, கந்தளாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தளாய் ஆலய பரிபாலனசபை பொருளாளர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

தமிழர் வரலாற்றிலே சோழர் காலம் பொற்காலமாக போற்றப்படுகின்றது. சோழராட்சியிலே கந்தளாய், பதவியா, திருக்கரசை மாநகரம் போன்ற இடங்களிலே சிவ ஆலயங்களும் ஏனைய ஆலயங்களும் அமைக்கப்பட்டு சிறப்பு மிக்க நகரங்களாகவும் பிரசித்தி பெற்ற கேந்திர முக்கியத்துவம் வாய்ந்தனவாகவும் இந்த நகரங்கள் காணப்பட்டுள்ளன என்பதை வரலாற்றுச் சான்றாதாரங்கள் உறுதிப்படுத்துகின்றன. சோழர்கள் கந்தளாயில் நடைமுறைப்படுத்திய நிர்வாகம், நீர்ப்பாசன பணிகள் பற்றி கந்தளாய்க் கல்வெட்டு, மானாங்கேணிக் கல்வெட்டு என்பன சான்று பகிர்கின்றன. சோழர் கால பிராமணர்களுக்கு நில நன்கொடைகளை வழங்கி பிராமணர் குடியிருப்புக்களை ஏற்படுத்தி உள்ளனர். அக்குடியிருப்பே சதுர்வேத மங்கலம் எனப்பட்டுள்ளது. சதுர்வேத மங்கலத்தின் நான்மறையும், கற்றுணர்ந்த பிராமணர்கள் ஆலயங்களில் கிரியைகள், பிரார்த்தனைகள், புராணப்படலம் செய்ததோடு சமய தாபனங்களிலும், மடங்களினதும் சமய நெறிகளை போதித்தார்கள். வேதங்களை பயிற்றுவித்தார்கள். "சதுர்வேத மங்கலத்து பெருங்குடிப் பெருமக்களே" என்ற கல்வெட்டு வாசகத்தைப் பார்க்கும் போது சீரிய சமூகமொன்று சிறப்புற்று வாழ்ந்தமையை அறிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது. இற்றைக்கு 1600 ஆண்டுகளுக்கு முன்னர் சோழ மன்னனான குளக்கோட்டன் மகாவலி நீரை வாய்க்கால் வழியாக கொண்டு வந்து கந்தளாய்க் குளம் எனும் பெருங்குளத்தை கட்டி நீரைத் தேக்கி வைத்து பெரும் விவசாயப் பூமியை தாபித்து கோணேசர் பூமியை சிவபூமியாக மாற்றியமைத்த பெரும் பேற்றைப் பெறுகின்றான். குளக்கோட்டன் மூட்டிய திருப்பணியில் மற்றுமொரு அம்சமே அணைகடந்து மடை திறந்து நீர் வெள்ளம் மட்டற்றுப் பாய வேண்டி அமைக்கப்பட்ட கந்தளாய் குளக்கோட்டுப்பதி சித்தி விநாயகர் ஆலயமாகும். சோழர் கால தொன்மை மிகு பிள்ளையார் ஆலயத்தின் பெருமையும், மகிமையும் வரம்புக்குட்பட்டதன்று. தொன்றுதொட்டு இன்று வரை புனல் பாயும் பொன்னகராம் கந்தளாயின் காவல் தெய்வமாகவும் கருணைக் கடவுளாகவும் கணபதி விளங்குகின்றார். கருங்கற் சிலையாக இரு வினை போக்கும் மூல விநாயகனாக அருள்பாலித்து வருகின்றார். சித்தியும் புத்தியுமாக நித்திய கருணைக்கடலாக, அருளின் வடிவினனாக வேண்டுவோர்க்கு வேண்டியாங்கு அருளும் வேழமுகத்தோனாக, ஞான முதல்வனாக விளங்கும் கட்டளைப் பிள்ளையார் ஆலயம் சுமார் 16 வருடங்களின் பின்னர் புனராவர்த்தனம் செய்யப்பட்டு புதுப் பொலிவுடன் குடமுழுக்கு காண்கின்றது. வற்றாத வளநதிகள் வளைந்து மருங்கெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாய்ந்தோட மத்தியில் பேரழகுடன் விளங்கும் கோயிலின் கும்பாபிஷேக திருப்பணிக்கு எம்முடன் இணைந்து பெருந் தொண்டாற்றிய அனைத்து அன்பர்களுக்கும் நன்றிகளையும் பாராட்டுக்களையும் கூறிக் கொள்கின்றேன். ஆலய தரிசனம் கோடிப் புண்ணியம் என்பார்கள். தொன்மைமிகு பிள்ளையார் ஆலயத்தின் கும்பாபிஷேகத்தினுக்கு வாழ்த்துச் செய்தி எழுதும் பெரும் பாக்கியத்தினை தந்த பேழை வயிற்றுப் பெருமகனாம் கந்தளாய் சித்தி விநாயகனின் எல்லையற்ற பெருங்கருணை இங்கு வாழும் அனைவருக்கும் என்றும் கிடைக்கவும், தாழ்வுற்ற தமிழரெல்லாம் வாழ்வுற்று சீர் பெற்று சிறப்புடன் வாழவும் வக்கிரதுண்ட மஹாகாயனின் பாதங்களை பணிந்து நிற்கின்றேன்.

T. ரவிச்சந்திரன்
பொருளாளர்
கந்தளாய்ப் பிள்ளையார் ஆலய
பரிபாலன சபை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்ற உறுப்பினர் திரு. இரா. சம்பந்தன் அவர்களின் வாழ்த்துச் செய்தி

திருக்கோணமலை மாவட்டத்தில் வயலும் வயல் சார்ந்ததுமான மருத நில மாட்சியுடன் வளங்கொழிக்கும் பிரதேசம் கந்தளாய்.

தொன்மையும், மேன்மையும்மிக்க கந்தளாய் தொடர்ந்து தமிழ் சைவ ஆசாரங்களுடன் மிளிரும் நமது பூர்வீகப் பிரதேசம். ஆயிரத்து அறுநூறு ஆண்டுகளுக்கு முன்னரே - மும்முடிச் சோழ மன்னர்களின் ஆளுகைக்கு உட்பட்ட சமயத்திலேயே - சதா வேதபாராயணம் ஒலித்தமையால் இது சதுர்வேதி மங்களம் என்று மாட்சிமைப்படுத்தப்பட்டது.

தமிழினம் வேரூன்றி, விழுது விட்டு, கிளை பரப்பி தொடர்ந்து வாழும் செம்மைமிகு பிரதேசம் கந்தளாய். இங்கு அமைந்த குளக்கோட்டபதி கட்டளைப் பிள்ளையார் ஆலயம் குளக்கோட்ட மன்னனின் திருப்பணியுடனேயே தோற்றம் பெற்றதென்பது நம்பிக்கை.

இந்தப் பிரதேசத்தில் காலம் காலமாய் வாழும் தமிழ் மக்களின் சமூக மையமாக கந்தளாய் பிள்ளையார் ஆலயம் திகழ்கின்றது.

1986ஆம் ஆண்டு கந்தளாயில் நிகழ்ந்த பேரனர்த்தத்தின் போது கந்தளாய்க் குளம் உடைப்பெடுத்து, குடிமனைகள் அள்ளுண்டு போயின. அன்றிருந்த பிள்ளையார் ஆலயமும் நிலத்தோடு நிலமாக அழிந்து போனது. ஆனாலும் கல்லாலான கருவறை மூர்த்தி - பழம்பதி பிள்ளையார் சிலை - மட்டும் அந்த இடத்திலேயே மண் மூடிக் கிடந்தமை பலரையும் ஆச்சரியத்துக்குட்படுத்தியது.

அவ்வாறு, ஆபத்பாந்தவனமாக, அநாதரட்ஷகனாக விளங்கும் பிள்ளையாருக்கு புதிதாக ஆலயமும் கட்டப்பட்டு 1999ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நடத்தப்பட்ட போது நாம் அகமிக மகிழ்ந்தோம்.

மீண்டும் 16 வருடங்களுக்குப் பின்னர் ஆலயம் மீண்டும் புனராவர்த்தனம் செய்யப்பட்டு இப்போது குடமுழுக்கு காணுவது நமது பேறே. திருப்பணிக்கு உழைக்கும் அனைவருக்கும் எனது வாழ்த்துக்கள், பாராட்டுக்கள், நன்றிகள். கும்பாபிஷேக வைபவம் சிறப்புற அமைய கந்தளாய்ப் பிள்ளையாரின் பெருங்கருணை எமக்கு உதவும் என நம்புகிறேன்.

இரா. சம்பந்தன்,
நாடாளுமன்ற உறுப்பினர் - திருக்கோணமலை மாவட்டம்,
தலைவர் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

පුල්ලායාර කෝවිල් පරිපාලන සභාව,

කෝවිල් පාර,

කන්තලේ.

## <u>ශුභාශිංශනය පුද කිරීම</u>

පෞරාණික උරුමකම් රැසකට නෑකම් ඇති කන්තලේ පුරවරයේ හින්දු සංස්කෘතික උරුමයක් වන කුලක්කෝට්ටුපදි සිත්ති විනායගර් කෝවිලේ වසර 16 කට පසුව දෙවන වරට පැවැත්වීමට කටයුතු සංවිධානය කොට ඇති මහා කුම්භාභි ශේක දේවමංගල්‍ය උත්සවයට ශුභාශිංශනය පිරිනැමීමට ලැබීම සතුටකි.

මෙම ඓතිහාසික භූමියේ පැවැත්වෙන මෙම මහගු පුල්ලයාර දේව පූජාවට සහභාගි වන ප්‍රදේශවාසී බෞද්ධ,හින්දු සියලු බැතිමතුන්ට පුල්ලයාර දේවියන්ගේ අශිර්වාද ලැබේවායි ! ප්‍රාර්ථනා කරන අතර මෙම පුණ්‍ය කාර්ය වෙනුවෙන් මහගු කැපවීමකින් කටයුතු කරණු ලබන කෝවිල් පරිපාලන සභාවට මාගේ භක්ති පූර්ණ ශුභාශිංශනය පුදකරමි.

ස්තූතියි

මෙයට - හිතවත්

බුද්ධශාසන කීර්ති ශ්‍රී දේශාභිමානී
ඇම්. කේ. ඒ. ඩී. එස්. ගුණවර්ධන
ඉඩම් අමාත්‍ය
"මණිකන මැදුර" අංක. 1200/6,
රජමල්වත්ත පාර, බත්තරමුල්ල.
සාමවිනිසුරු (ලි.ප.අ: 98/08/නැ/මුදි/049)
කන්තලේ.

# முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. க. துரைரெட்ணசிங்கம் அவர்களின் வாழ்த்துச் செய்தி

கிழக்கிலங்கையின் திருக்கோணமலை மாவட்டத்தின் மேற்கே அமைந்துள்ள பழம்பெரும்பதி கந்தளாய் தெட்சண கைலாயம் எனப் போற்றப்படும் திருக்கோணேஸ்வரத்துடன் நெருங்கிய வரலாற்று தொடர்புகளைக் கொண்டுள்ளது இப்பதி. சோழமன்னன் குளக்கோட்டனின் வரலாற்றுடன் இணைந்து சிறப்பிடத்தை பெற்றும் விளங்குகின்றது.

இலங்கையை ஆண்ட கஜபாகு மன்னன் தான் செய்த தவறினால் கண்பார்வையிழந்து மீண்டும் கண் தழைத்த இடமே "கந்தளாய்" என்று வழங்குகின்றது என்பது புராண வரலாறு.

குளக்கோட்டன் திருப்தி கந்தளாயில் அமைந்த சிவாலயமும் தொண்மை வாய்ந்தது. இவ்வாலயத்தின் சூழலில் அந்தணர்கள் தங்கியிருந்தது வேதங்களை ஓதி சிவனை வழிபட்டு வந்தனர். இதனால் 'சதுர்வேத மங்களபுரம்' என்று அழைக்கப்பட்ட வரலாறும் உண்டு. இதற்குச் சான்றாக இவ்வாலயச் சூழலில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுக்களும் ஏனைய தடயங்களும் சான்று பகிர்கின்றது.

குளக்கோட்டப்பதி கட்டளைப்பிள்ளையார் கோவில் கிராமத்தில் அமைந்துள்ளது. இதனால் அவ்விடம் கோவில் கிராமம் என்று பெயர் பெற்றது. கந்தளாய் குளக்கட்டுக்கு அண்மித்ததாக இயற்கை வனப்புள்ள இடத்தில் இவ் கிராமமும், கிராமத்தின் மத்தியில் இவ் ஆலயமும் அமைந்திருப்பது ஒரு தனிச்சிறப்பு.

வற்றாத மாவலியாள் வளமுட்ட எங்கும் பரந்து விளங்கும் செந் நெல்வயல் வெளியும் என்றும் பசுமையுடன் இப்பிரதேசத்தை அழகுபடுத்துகின்றது.

1986ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20ஆந் திகதி நள்ளிரவு கந்தளாய் குளம் அணைக்கட்டு எதிர்பாராமல் உடைப்பெடுத்தது. இதனால் கோவில் கிராமமும், பிள்ளையார் ஆலயமும் பாதிப்படைந்ததோடு இங்கு வாழ்ந்த மக்களும் மிகவும் பாதிப்புக்குள்ளானார்கள். அனர்த்தங்களைச் சந்தித்த பொழுதும் மனந்தளராது எல்லாம் வல்ல கட்டளைப் பிள்ளையார் துணை கொண்டு இவ்வாலயத்தையும், கிராமத்தையும் மீள் எழுச்சி பெறவைத்து குடமுழுக்கு செய்து செய்து வழிபட்டு வந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16 வருடங்களின் பின்பு ஆலயத்தில் பாரிய திருப்பணி வேலைகள் செய்யப்பட்டு இவ் வருடம் மேமாதம் முதலாம் திகதி மகா குடமுழுக்கு வைபவம் மிக சிறப்பாக நடத்தப்படவிருக்கின்றது. இச் செய்தி கந்தளாய் மக்களுக்கு மாத்திரமன்றி அனைத்து சைவமக்களுக்கும் மகிழ்ச்சியூட்டும் என்பதில் ஐயமில்லை.

இவ்வாலய பரிபாலன சபையினர், இக்கிராம மக்கள், இளைஞர்கள், யுவதிகள் ஏனைய பிரமுகர்கள் அனைவரும் சங்கமாகி இப் புனித பணியை நிறைவு செய்துள்ளனர். இங்கு வாழும் சகோதர இனமக்களும் தங்கள் பங்களிப்பையும் உதவி இன ஒற்றுமைக்கு உரமூட்டியிருப்பது ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

சாந்தியும், சமாதானமும், சகோதரத்துவமும் மலர்ந்து மக்கள் அனைவரும் சகல செல்வங்களும் பெற்று வளமுடன் வாழ எல்லாம் வல்ல கட்டளைப் பிள்ளையாரின் நல் அருள்வேண்டி வாழ்த்துகின்றோம். இப்புனித கைங்காரியத்தில் தம்மை இணைத்துக் கொண்ட அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம்.

நன்றி

க. துரைரெட்ணசிங்கம்
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்,
திருக்கோணமலை மாவட்டம்.

இல. 204/06, லோவர் வீதி,
திருகோணமலை.
10.03.2015





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# සුභ පැතුම් පණිවිඩය

නැගෙනහිර පළාතේ, ත්‍රිකුණාමලය දිස්ත්‍රික්කයේ කන්තලේ යන නගරය ද්‍රවිඩ ජාතීන් දීර්ඝ කාලයක සිට පදිංචි වූ බවට සාධක තිබෙන ස්ථානයක් බවත්. මෙම ප්‍රදේශය මහවැලි ගඟෙන් පෝෂිත වැව් හා එයින් සරුසාර වන වෙල්යාය පිහිටා තිබීමේ භාග්‍යද හිමි වේ. එවකට රාජධානියේ රජකළ ගජබා රජතුමා හට ක්‍රි:ව:1132 - 1153 දක්වා රජකම අහිමි වී නැවත රජකම ලබා ගැනීම හේතුවෙන් කන්තලේ යන නාමය ව්‍යවහාරයට පත් වූ බව ද්‍රවිඩ ජනතාවගේ මතය වේ. ඒ බවට ඉතිහාසමය වශයෙන් සාදක තිබෙන බවටත් ඔවුන්ගේ විශ්වාසයක් පවතී. ඊයේ, අද හෙට නොව නැගෙනහිර ධාන්‍ය ගබඩා ලෙස සලකුණු ලබන සියලුම භවබෝග සහිත කන්තලේ ප්‍රදේශයේ ජන ජීවිතයට සහ ජන සෞභාග්‍යයට කවදත් ආරක්ෂකයකු ලෙස සිටින කන්තලේ පිල්ලෙයාර් කෝවිලේ ගණ දෙවියන්ගේ පිහිට නිරන්තරයෙන් ලැබෙනු ඇත. ආදි කාලයේ සිට හින්දු බැතිමතුන්ට පමණක් නොව මෙහිලා වැඳුම් පිදුම් කරනු ලබන සියලුම දෙනාට ඔවුන්ගේ සියලු ප්‍රාර්ථනා ඉෂ්ඨ සිද්ධ කර දෙනු ඇත. පසුගිය කාලයේ ඇති වූ නොසන්සුන්තාවයන් හා ව්‍යවසනයන් හේතුවෙන් පීඩාවට පත්ව සිටි මහජනතාව ආරක්ෂා කරමින් ඔවුන්ට ආශිර්වාද පැතූ අවස්ථාද බොහෝය.

හින්දු බැතිමතුන් පමණක් නොව මෙම ප්‍රදේශයේ පදිංචි බෞද්ධ බැතිමතුන් පවා විශ්වාස කරන ස්ථානයක් වන පිල්ලෙයාර් කෝවිල මෙම ප්‍රදේශයේ හින්දු හා සිංහල බැතිමතුන් හට සාමයෙන් හා සමගියෙන් ජීවත් වීමට මහත් රුකුලක් වී ඇත. ගණදෙවියන්ගේ ආශිර්වාදය නොඅඩුව ලැබෙන මෙම පිල්ලෙයාර් කෝවිල අවුරුදු 16 කට පසුව අලුත්වැඩියා කොට නව මුහුණුවරකින් කිරි ඉතිරවීමේ කටයුතු සිදු කිරීම සම්බන්ධව මා සතුටට පත්වෙමි. මෙම උත්සවයේ කටයුතු සඳහා ඉදිරිපත් වී සිටින දායක සභාවට, බැතිමතුන් ඇතුළු සියලු දෙනාට මාගේ ස්තුතිය සහ සුභ පැතුම් පුද කර සිටිමි. උත්සව කටයුතු සාර්ථකව කර ගැනීමට හැකි වේවා කියා සහ කන්තලේ ප්‍රදේශවාසී සියලු දෙනාට සාමය, සතුට පිරි සෞභාග්‍යමත් ජීවිතයක් උදාවේවා කියා මා ප්‍රාර්ථනා කරමි. සියලු දෙනාටම ගණදෙවියන්ගේ පිහිටයි:

වී. සුනිල් ශාන්ත රණවීර
හිටපු පාර්ලිමේන්තු මන්ත්‍රී
එ. ජ. ප. ප්‍රධාන සංවිධායක
සේරුවිල ආසන



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மீள் குடியேற்ற அமைச்சர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

கந்தளாய் குளக்கோட்டுப் பதி பிள்ளையார் ஆலயத்தின் மகாகும்பாபிஷேகத்தை யொட்டி வெளியிடப்படும் மலருக்கு எனது வாழ்த்துச்செய்தியை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

சிவபக்தன் இராவிணன் வழிபட்ட தென்யிலை சிவன் உறைந்துள்ள திருக்கோணமலை மாவட்டம் சோழர்களின் ஆணைக்குட்பட்டிருந்த காலத்தில் சைவமும் தமிழும் தழைத்தோங்கிய செழிப்பு மிக்க ஊராக கந்தளாய் விளங்கியமைக்கான சான்றுகள் உள்ளன. குளங்களும், விளைநிலங்களும் சூழ்ந்த கந்தளாய் சோழமன்னனான குளக்கோட்டன் மூட்டிய திருப்பணியின் காரணமாக சதுர்வேத பிரமபுரம் என்றும் விஜயராச சதுர்வேத மங்களம் என்றும் பெருமையாக பேசப்பட்டு வந்துள்ளது. அக்காலத்தில் அமைக்கப்பட்டதென கூறப்படும் குளக்கோட்டுப்பதி கட்டளைப் பிள்ளையார் ஆலயத்தின் மகிமை இன்றுவரை சிறப்பாக பேசப்பட்டு வருகின்றது.

வேண்டுவோர்க்கு வேண்டியாங்கு அள்ளி வழங்கும் அற்புத அருளாளனாய் அமர்ந்திருக்கும் கட்டளைப் பிள்ளையார் அனைத்து அடியாளர்களின் நெஞ்சங்களிலும் குடியமர்ந்துள்ளார். மூவினத்தவரும் இணைந்து வாழும் கந்தளாயில் எழுந்தருளியிருக்கும் கட்டளைப் பிள்ளையாரை சிங்கள மக்கள் மிகவும் பக்தி சிரத்தையோடு வழிபாடு செய்வதும், நேர்த்திக்கடன்களை செலுத்துவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

தொன்மை மிகு பிள்ளையார் ஆலயம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு இன்று மகா கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் கூடியிருப்பது மிக மகிழ்ச்சியைத் தருவதாகும். ஆலய புனர்நிர்மாணப் பணிகள், மகா கும்பாபிஷேக வேலைகள் என்பவற்றில் மிகச் சிறப்பாக ஈடுபட்ட பரிபாலன சபையினரையும் ஆலய சமூகத்தினரையும் பாராட்டுகின்றேன்.

தமிழர்களின் பண்பாடும், பாரம்பரியங்களும் தொடர்ந்து பேணப்படவும், சமாதானமும் மகிழ்ச்சியும் பெருகவும், கந்தளாய் வாழ் அனைத்து மக்களும் சீர்பெற்று வாழவும் துங்கக்கரிமுகத்து தூமணியான குளக்கோட்டுப்பதி கணபதியினை வேண்டுகின்றேன்.

சி. தண்டாயுதபாணி
கல்விப் பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
மீள் குடியேற்ற அமைச்சர், கிழக்கு மாகாணம், திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துசமய கலாசார பணிப்பாளர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

'ஓம்' என்ற எழுத்தின் வடிவமாய் ஓங்கார ரூபத்தில் எழுந்தருளி இருக்கும் சகல ஞானத்திற்கும் அதிபதியாக விளங்குபவர் விநாயகப்பெருமான் ஆவார். இவரை இந்துக்கள் முதல் தெய்வமாக வைத்துப் போற்றி வழிபடுகின்றனர். இலங்கையின் கிழக்கே இயற்கை எழில் நிறைந்த நெய்தல் நிலப்பரம்பாம் திருக்கோணமலை மாவட்டத்தின் கந்தளாய் நகரில் அருள்மிகு பிள்ளையார் ஆலயம் அமைந்துள்ளது. இவ் ஆலயத்தில் நடைபெறவுள்ள மகா கும்பாபிஷேகத்திற்கும், அதனை முன்னிட்டு வெளியிடப்படும் சிறப்பு மலருக்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆன்மாக்களைப் பக்குவப்படுத்தி செம்மையான ஆன்மீக வாழ்க்கை வாழ்வதற்கு ஆலயங்கள் அடிப்படையாக அமைகின்றன. இறைவன் வீற்றிருந்து ஆன்மாக்களுக்கு அருள் செய்கின்ற இத்தகு ஆலயங்கள் சமூகக் கலைக்கூடமாகவும் திகழ்கின்றன. ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள ஆலயங்கள் அந்த கிராம மக்களின் ஆன்மீக வாழ்வுக்கும், சமூகம், கலைகள் சம்பந்தமான வாழ்வியல் வளர்ச்சிக்கும் தளமாக விளங்குகின்றன என்பதில் ஐயமில்லை. இத்தகைய அரிய பணியாற்றும் ஆலயங்களைப் பேணிப்பாதுகாத்தல் அவசியமாகும்.

அந்தவகையில், கந்தளாய் அருள்மிகு பிள்ளையார் ஆலயமும் சிறப்புப் பெற்று விளங்குவதுடன், மகா கும்பாபிஷேகமும் நடைபெறவுள்ளமை வாழ்த்துக்குரியதாகும். மகா கும்பாபிஷேகத்தை சிறப்பாக நடாத்தவுள்ள ஆச்சாரிய பெருமக்களுக்கும், ஒழுங்கமைத்த ஆலய பரிபாலன சபையினருக்கும் எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எல்லாம் வல்ல விநாயகப்பெருமானின் அருள்பெற்று எல்லோரும் இன்பமாக வாழவேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

சாந்தி நாவுக்கரசன்
பணிப்பாளர்
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# සුභ පැතුම් පණිවුඩයයි.

ඉතිහාසය පුරාවට දිවයිනේ ත්‍රිකුණාමලය දිස්ත්‍රික්කයේ ද්‍රවිඩ ජනයා පදිංචිව සිටි බවට දැන ගන්නට ලැබේ.

කෝනේෂ්වර දේවාලයට පූජා කිරීමට එවකට රජකම් කළ රජවරුන් විසින් වගා කිරීමට සුදුසු බිම් මහජනයාට බෙදා දී තිබේ. එම ගොවිබිම් වලට වාරිමාර්ග පහසුකම් ලබා දීම සඳහා අතිවිශාල වැව් ප්‍රමාණයක් කන්තලේ ඉදි කර නිසි පරිදි වාර්මාර්ග කටයුතු සිදු කිරීම සඳහා සැළසුම් කර වැව් බැම්මේ නාග දෙවියන් සඳහා දේවාලයක් ඉදි කර පූජා කටයුතු කිරීමට ඉඩ සළස්වා ඇත.

ස්වභාවික දායාදයක් වන ජල සම්පත පූජා කටයුතු වලට මුල් තැනක් ලබා දෙන බවට නොසැලෙන විශ්වාසය දරණ හින්දු බැතිමතුන් සහ බෞද්ධ බැතිමතුන් විසින් මෙම දේවාලය ප්‍රතිසංස්කරණය කොට පූජා කටයුතු පවත්වනු ලැබේ.

හින්දු සංස්කෘතික වැඳුම් පිදුම් හා බෞද්ධ වැඳුම් පිදුම් එක මවකගේ දරුවන් දෙදෙනෙකු සේ පවතින අතර, ජාති භේදයකින් තොරව කන්තලේ ප්‍රදේශයේ මෙම ජාතීන් සාමකාමීව සතුටින් ජීවත් වීම මුළු දිවයිනටම ආදර්ශයක් වේ.

සැම ආගමකින්ම අන්‍යාගමිකයන් අතර බැඳීමක් ඇති කරන බව මාගේ විශ්වාසයයි.

මෙම පෞරාණික දේවස්ථානය ජාතිවාදී අරගලයේ දී හානියට පත් වී නැවත ප්‍රතිසංස්කරණ කටයුතු සඳහා හිටපු පාර්ලිමේන්තු මන්ත්‍රී හා මාගේ සහෝදරයෙකු වන සුනිල් ශාන්ත රණවීර මහතා ඇතුළු මා මෙම ප්‍රතිසංස්කරණ කටයුතු සඳහා දායක වීම මාගේ වගකීමක් ලෙස සලකන අතර, මේ සඳහා මග පෙන්වා දුන් ගණ දෙවියන්ට ස්තුති කරමි.

මෙම දේවස්ථානයට මින් මතු කිසිදු අගතියක් සිදු නොවීමටත්, ඒ සඳහා දායක වීමටත්, යම් ආගමකින් භාෂා දෙකක් කතා කරන අය ඒකරාශි කළ හැකි බව මාගේ විශ්වාසය වන අතර, මෙම උත්සවය සාර්ථක කර ගැනීම සඳහා ගණ දෙවියන්ගේ ආශිර්වාදය ලැබේවායි ප්‍රාර්ථනා කරමි.

සරත් රණවීර ,
රණවීර ස්ටෝර්ස් ,
ප්‍රධාන පාර,
කන්තලේ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. வி. ஆர். ஜீவானந்தம்
11/34, தக்கியா லேன்,
திருக்கோணமலை.

அன்புடையீர்!

**தந்தளாய் கட்டளைப் பிள்ளையார் ஆலயம்**

மேற்படி ஆலயம் சம்பந்தமான தங்களது 25.04.1986 ஆம் திகதிய கடிதம் கிடைத்தமையிட்டு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் இவ்வாலயம் திரும்பவும் புதிதாகக் கட்டுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். இது சம்பந்தமாக திருக்கோணமலை அரசாங்க அதிபருடனும் கடிதமூலம் தொடர்பு கொண்டுள்ளோம்.

இவ்வாலயம் சம்பந்தமாக எமக்கு மேலதிக விபரங்கள் தேவைப்படின் தங்களுடன் தொடர்பு கொள்ளவுள்ளோம் என்பதனையும் அறியத்தருகின்றேன்.


நன்றி

இங்ஙனம்,
அன்புள்ள
என். இராஜரட்னம்,
பிரதிப் பணிப்பாளர்,
இந்து சமய அலுவல்கள் திணைக்களம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குள உடைப்பின் பின்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரமதானம்





1986ம் ஆண்டு கந்தளாய் குள உடைப்பின் பின்பு அமரர். வ.இ. ஜீவானந்தன், திரு.ஏ.கணேஸ் திரு. ம. சிவராசா ஆகியோரது விடா முயற்சியாலும், ஊர் மக்களினதும் பாரிய பங்களிப்பினாலும் தற்காலிக கட்டிடம் அமைக்கப்பட்டு, வழிபாட்டுக்கு வசதி செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டளைப் பிள்ளையார் கோவில் கந்தளாய்

சைவப்புலவர். பண்டிதர் இ. வடிவேல்

திருக்கோணமலைப் பட்டினத்திலிருந்து கொழும்பு, கண்டிக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் முப்பத்தொன்பது கில்லோ மீற்றர் தூரத்தில் கந்தளாய் என்ற இடம் இருக்கின்றது. புராதன வரலாறுகளைக் கொண்ட இவ்வூர் கந்தளாய்க் குளத்தினால் இன்றும் சிறப்புற்று விளங்குகின்றது. திருக்கோணேஸ்வரத்திற்கும், கந்தளாய்க்கு முள்ள தொடர்புகள் சிலவற்றைக் கந்தளாய்ச் சினவ்கோவில் வரலாற்றில் கூறியுள்ளோம். அனுராதபுரத்தை அரசாண்ட கஜபாகு மன்னன் திருக்கோணேஸ்வரத்தை அழிக்கும் நோக்கத்தோடு படையெடுத்து வந்ததாகவும், அவனுடைய அகங்காரத்தினால் கண்பார்வையை இழந்ததாகவும், கோணேசப் பெருமானுடைய அருளால் மன்னன் வரும் வழியில் கண்பார்வையைப் பெற்றதாகவும், கண் தளைத்த இடத்திற்கு கண்தளை என்று பெயரிட்டதாகவும் திருக்கோணாசல புராணம் கூறுகின்றது. கண்தளை என்ற இடமே கந்தளாய் என்று இன்று அழைக்கப்பட்டு வருகின்றது. பின்னர் கஜபாகு மன்னன் கோணேஸ்வரத்தைத் தரிசித்து கோவிலை ஆதரித்து மானியங்களும் கொடுத்தானென்று கோணேசர் கல்வெட்டும் கூறுகின்றது.

கந்தளாய்ச் சந்தியிலிருந்து நாலூறு மீற்றர் தூரத்தில் இந்தக் கட்டளைப் பிள்ளையார் கோவில் இருக்கின்றது. இவ்வாலயத்தின் மேற்கு வீதியை எல்லையாகக் கொண்டு தம்பலகமத்து வயல்வெளிகளை நீர்ப்பாய்ச்சும் பேராறு வருடம் முழுவதும் நீர்நிறைந்து பாய்ந்து கொண்டிருக்கின்றது. குளக்கோட்டு மன்னனால் கந்தளாய்க் குளம் கட்டப்பட்ட போது, விநாயகப் பெருமானை வழிபட்டுக் கட்டுவேலையை ஆரம்பித்தான். அதற்காகப் பிள்ளையாரைப் பிரதிஷ்டை செய்யக் கட்டப்பட்ட கோவிலே இந்தக் கட்டளைப் பிள்ளையார் கோவில். கந்தளாய்க்குளத்தைக் கட்டுவதில் மனித சக்தியையும், தெய்வ சக்தியையும் பயன்படுத்தியதாகப் புராணங்களும், கோணேசர் கல்வெட்டும் கூறுகின்றது. இன்றும் இந்தத் தெய்வ சக்திகளுக்குரிய வேள்விக் கிரியைகள் நடைபெற்று வருகின்றன. தம்பலகமத்திலுள்ளவர்கள் மக்களின் நன்மைக்காகவும், விளைபூமிகளின் நன்மைக்காகவும், விளைபூமிகளின் நல்ல விளைச்சலுக்காகவும், மழை, வெயில் என்பவற்றை அவ்வப்போது பெறுவதற்காகவும் கந்தளாய் வேள்வி, மாகமம் வேள்வி, நெருஞ்சித்தீவு வேள்வி, மல்லிகைத்தீவு வேள்வி, நாயன்மார்திடல் வேள்வி முதலிய வேள்விகளை பண்டைக்காலத்திலிருந்தே செய்து வந்திருக்கின்றார்கள். இந்த வேள்விகளின் விபரத்தைத் தம்பலகமம் ஆதிகோணநாயகர் வரலாற்றில் காண்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பலகமம் விவசாயிகள் மழைவேண்டும் போது மழையையும், வெயில் வேண்டும் போது வெயிலையும் பெறுவதற்காக விதைப்பு, அறுவடை காலங்களில் திருக்கோணேஸ்வரத்திற்கு நேர்த்தி வைப்பார்கள். மழை வேண்டுமென்றால் பச்சைப் பட்டும், வெயில் வேண்டுமென்றால் சிவப்புப் பட்டும் நேர்த்தி வைத்து அங்கிருந்து மங்கள வாத்தியங்களுடன் அந்தப் பட்டை எடுத்து வந்து கந்தளாய்க் குளக்கட்டின் அருகாமையிலுள்ள கட்டளைப் பிள்ளையாருடைய திருவடிகளில் ஒரு இரவு முழுவதும் வைத்திருந்து வழிபாடு செய்வார்கள். இதுத்த நாள் சூரியோதயத்தில் அந்தப் பட்டை எடுத்துச் சென்று கந்தளாய்க் குளத்தில் அதற்குரிய இடத்தில் சாத்தி வழிபாடு செய்வார்கள். இன்றும் இந்த வைகவம் நடைபெற்று வருகின்றது. இப்படிச் செய்தால் அவர்கள் விரும்பும் வேளையில் மழையையோ, வெயிலையோ பெற்று வருகின்றார்கள். ஈழத்தில் எங்குமே காணமுடியாத இவ்வற்புத நிகழ்ச்சி இன்றும் நாம் காணக்கூடியதாக இங்கு நடைபெற்று வருகின்றது.

கற்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபங்களைக் கொண்ட இந்த ஆலயத்தின் கருவறையில் குளக்கோட்டு மன்னனால் ஸ்தாபிக்கப்பட்ட விநாயகப் பெருமான் திருவுருவம் காணப்படுகின்றது. அர்தத மண்டபத்தில் எழுந்தளி விநாயகரும் மகாமண்டபத்தில் மூஷிகம் பலிபீடமும் இருக்கின்றது. வைரவருக்கும் தனிக்கோவிலும் மணிக்கோபுரமும் உண்டு. மூன்றுகாலத் தினப்பூசையும், ஆவணிச் சதுர்த்தி, பிள்ளையார் கதை, திருவெம்பாவை, சிவராத்திரி முதலிய சிசேட பூசைகளும் நடைபெற்று வருகின்றது. கந்தளாய்க் குளம் கட்டியபோது குளக்கோட்டு மன்னன் மந்திராலோசனை செய்வதற்காக அமைக்கப்பட்ட கருங்கல்லால் செய்யப்பட்ட ஆசனங்கள் இந்த கோவிலிலிருந்து சிறிது தூரத்தில் இருப்பதாகவும் இந்த ஆலய வரலாற்றைத் தந்த திரு. வ.இ.ஜீவானந்தமவர்கள் கூறுகின்றார்கள்.

கந்தளாய்க் கட்டளைப் பிள்ளையார் கோவிலைத் தரிசிப்பவர்களுக்கு முக்கிய தெரிசனமாய் அமைந்திருப்பவர் நாகதம்பிரான். விடந்தீர்க்கும் புஜங்கப் பெருமானாகிய ஐந்துதலை நாகதம்பிரான் சிலை இந்தப் பிள்ளையார் கோவிலுக்கருகில் தனிக்கோவில் கட்டி ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. முன்னொரு காலத்தில் நன்னியர் என்பவர் வேட்டைக்குச் சென்ற போது கந்தளாய்க் குளத்திற்கு மேற்கே குறிஞ்சாக்குளம் என்ற இடத்தில் இந்த நாகதம்பிரான் சிலையைக் கண்டாராம். விஷமுள்ளுக் கீறியதால் ஏற்பட்ட காயம் அவருடைய காலில் இருந்தது. அந்த நாகதம்பிரான் சிலைக்கு அருகே சென்ற போது காந்தத்தால் இழுக்கப்படுவது போல் அவருடைய கால் இழுக்கப்பட்டு காயம் நாகதம்பிரானுடைய வாயருகில் ஒட்டிக்கொண்டதாம். சிறிது நேரத்தில் காயத்திலுள்ள விஷம் நீங்கி விடுபட்டதாம். இந்த அற்புதத்தை அவர் சிலருக்கு கூறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு சென்று நாகதம்பிரானை வண்டியில் ஏற்றி வந்தார்கள். வரும்போது பல சோதனைகளுக்குட்பட்டார்களாம். இரண்டு வண்டிகள் உடைந்து விட்டன. மூன்றாவது வண்டியில் ஏற்றிவந்து ஊத்தூரப் பிள்ளையார் கோவிலில் வைத்துப் பொங்கல் செய்து வழிபட்டு அங்கிருந்து இந்தக் கோவிலுக்குக் கொண்டுவந்தார்களாமென்ற செய்தியை திரு. ம. செல்லையாபிள்ளை என்பவர் கூறினார். அவருக்கு நன்றியுடையேன். இந்த நாகதம்பிரானை இங்கு வைத்து அபிஷேகம் பூசைகள் செய்து வழிபட்டுவரும் போது இதன் மகத்துவத்தையறிந்த ஓவசியர் திரு. இரத்தினசிங்கம் என்பவர் இந்த நாகதம்பிரானுக்குக் கோவில் கட்டிப் பிரதிஷ்டை செய்வித்தார். இதற்கும் மூன்றுகாலப் பூசை நடைபெற்று வருகின்றது. விஷத்தால் தீண்டப்படுபவர்கள் இந்த நாகதம் பிரானுடைய வாயில் கடியுண்டவரின் காயப்பகுதியை அழுத்தியவுடன் அப்பகுதி காந்தத்தால் ஈர்க்கப்பட்ட இரும்புபோல இறுகப் பற்றிக்கொள்ளும் விஷம் முழுதும் சிலையில் சென்றதும் கடியுண்ட அப்பகுதி விடுபடும். பின்னர் பால், தீர்த்தம் என்பவற்றால் அபிஷேகம் செய்து பூசை செய்வார்கள். இன்றும் இது நடைபெற்று வருவதாகக் கூறினார்கள். ஐந்து தலையுடைய நாதகம்பிரானின் இடது பக்கத்திலுள்ள இரண்டாவது தலையிலுள்ள வாயில் தான் விஷக் காயத்தை அழுத்துவார்களாம். திரு.நா. நாகராசா அவர்கள் இந்தத் தகவலைக் கூறினார்கள். அன்னாருக்கு நன்றி.

கந்தளாய்க் கட்டளைப் பிள்ளையார் கோவிலுக்கருகில் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலொன்றும் இருக்கின்றது. கர்ப்பக்கிரகம் அர்த்தமண்டபம், மகாமண்டபங்களைக் கொண்ட இக்கோவில் 1936ஆம் ஆண்டு திரு. மாரிமுத்து இராசையா என்பவரால் நமக்கேற்பட்ட துன்பம் நீங்கி இஷ்டசித்தி பெற்றதனால் நேர்கடனுக்காகக் கட்டப்பட்டது. கருவறையில் சதுர்ப்புஜங்களையுடைய மாரியம்பாள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. அர்த்தமண்டபத்தில் அப்பாளின் எழுந்தருளி விக்கிரகம் இருக்கின்றது. தினமும் மூன்று காலப் பூசையும், நவராத்திரியில் விசேட அலங்காரப் பூசைகளும் நடைபெற்று வருகின்றன. இந்த மூன்று கோவில்களுக்கு ஸ்ரீ.பா. நித்தியானந்தக் குருக்கள் பூசை செய்து கொண்டிருக்கின்றார். இந்தக் கோவிலில் உரு ஆடி அருள்வாக்குக் கூறும் வழக்கம் இருந்து வருகின்றது. இவ்வாலய வரலாற்றைத் தந்துதவிய திரு. சின்னத்தம்பு இராசையா என்பவருக்கு நன்றி உரியதாகுக.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் வழிபாட்டு வியாபகம்

ஸ்ரீலஸ்ரீ. மு. சுந்தரலிங்கதேசிகர்
ஆலடி விநாயகர் தேவஸ்தானம்
திருக்கோணமலை.

காணாபத்தியத்திற்கு ஆதாரமான நூல்கள் கணபதி உபநிடதம், ஹேரம்ப உபநிடதம் என்ற இரு சிறு உபநிடதங்கள். கணேச புராணம், ஸ்காந்தத்திலுள்ள கணேசமான்மியம், முத்தலை புராணம் என்பனவாகும். கணேச கீதை, கணேச தந்திரம், கணேச கல்பம், விநாயகர் பரத்துவம் முதலிய தனி நூல்களும் ஆகும். விநாயக புராணத்தை திருவாவடுதுறைக் கச்சியப்ப முனிவர் தமிழில் பாடியிருந்தார்.

காணாபத்தியம் என்ற தனிவழிபாடு ஒரு புறமிருக்க, பொதுவாக இந்து மக்கள் அனைவரும் தொழும் தெய்வங்களுள் கணபதியே முதலிடம் பெறுவார். அவருக்கு நடப்பதே முதற்பூசை கணேசனே முழுமுதற் கடவுளாக எல்லாத் தெய்வ பூஜைகளிலும் விளங்குகின்றார். கணங்களுக் கெல்லாம் நாயகரான அவரது துணையையே நாம் நற்காரியங்கள் எத்தனை தொடங்கினாலும் விஷ்ணுத்தலமாகிய ஸ்ரீரங்கத்தில் விக்கின கணபதி என்றும், திரு வல்லிக்கேணி பார்த்தசாரதிப் பெருமாள் கோவிலில் வெண்ணெய்ப் பிள்ளையார் என்றும், அழகர் கோவிலில் தும்பிக்கை ஆழ்வார் என்றும் பிள்ளையார் வழிபாடு வைஷ்ணவர்களாலும் நடைபெறுகின்றது. சமணர்களும், பௌத்தர்களும் கணபதியை வணங்குகின்றார்கள்.

இந்தியாவைத் தவிர நேப்பாளம், திபெத், பர்மா, சீனா, யப்பான், ம்கோலியா, இலங்கை, தாய்லாந்து, கம்போடியா, ஜாவா ஆகிய நாடுகளிலும் விநாயகர் வழிபாடு நடைபெற்று வந்துள்ளது.


விநாயகரை வழிபட்டபின்னரே அன்னை பராசக்தி பண்டாசுரனைப் போரிலே வென்றாள். விநாயகரை வழிபட்டபின்னே சிவபெருமான் திரிபுரதகனம் செய்தார். விநாயகரை வழிபட்டபின்பே வள்ளியை முருகன் திருமணம் செய்தார். வேதவியாசகர் மகாபாரதக் காவியத்தை இடையூறின்றி இயற்ற விநாயக வழிபாடு செய்து அவரைக் கொண்டே எழுதுவித்தார். ஔவையார் திருக்கயிலை செல்ல விநாயகரை அருள் புரிந்தார். இவையெல்லாம் புராண வரலாறுகள்.

இராவணனுடைய கர்வத்தை அடக்கி அவன் இலங்கைக்கு கொண்டு செல்லவிருந்த சிவலிங்கத்தைக் கோகர்ணத்தில் நிலைக்கச் செய்தவர் பிள்ளையார். விபீஷணன் இராமபிரானிடமிருந்து பரிசாகப் பெற்ற ரங்கநாதரின் திருவுருவச் சிலையை ஸ்ரீரங்கத்தில் நிலைக்கச் செய்தவர் பிள்ளையார். அகத்தியருடைய கமண்டலத்திலிருந்து காவிரி தீர்த்தத்தைப் பெருகச் செய்தவர் பிள்ளையார். நம்பியாண்டார் நம்பிக்கு அருள் புரிந்து தில்லையிலிருந்து தேவாரத் திருமுறைகளை வெளியுலகத்துக்குக் கொண்டுவந்தவர் பிள்ளையார். இவையெல்லாம் இதிகாச வரலாறுகள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பிள்ளையார்



அம்மன்



முருகன் வள்ளி தெய்வானை



நாகதம்பிரான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதிகோணநாயகரும் கட்டளைப் பிள்ளையாரும்

திரு. வே. வரதசுந்தரம்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிளை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேன்

நல்ல காரியம் எதனை ஆரம்பிக்கும் போதும், நாம் பிள்ளையார் சுழிபோட்டு ஆரம்பிக்கும் மரபு நம்மிடையே உண்டு. எந்தத் தெய்வத்தை வணங்கும் போதும் முதலில் பிள்ளையாருக்கு ஒரு கும்பிடு போடுவோம்.

பிள்ளையார் வழிபாடு நம்நாட்டில் மிகவும் பிரபல்யமானது. நமது நாட்டில் எப்பகுதிக்குச் சென்றாலும், ஆங்காங்கே பிள்ளையார் ஆலயங்கள் சிறியன, பெரியன என்று மரத்தடியில், ஆற்றங்கரைகளில், குளத்தடியில் என்று எங்கும் காணலாம்.

பிள்ளையார் வழிபாடு ஏறத்தாழ ஐயாயிரம் ஆண்டு பழமை வாய்ந்தது. சிந்துவெளி நாகரிகத்துடன் தொடர்புடையது என்பர். மகாபாரதத்தைத் தனது தந்திரத்தை உடைத்து எழுதிக் கொடுத்தவரே அவர்தான். பிள்ளையார் வழிபாடு ஓம் என்னும் பிரணவ மந்திரத்துடன் தொடர்புடையது. ஓம் என்பதில் அகர, உகர, மகர ஒலிகள் இணைந்து வேதத்தின் உட்பொருளாம் பிரணவத்தை உணர்த்துகின்றது. ஓம் என்னும் ஒலிவடிவமே பிள்ளையார்.

ஆலய பூசைகளில் பிள்ளையார் பூசை முதன்மை பெறுகின்றது. அறுகம்புல் பிள்ளையார் வழிபாட்டில் முதன்மை பெறுகிறது. இதன் பெருமையை விநாயக புராணம் எடுத்தியம்பும். குட்டிக் கொள்ளல், தோப்புக்கரணம் ஆகியவை பிள்ளையார் வழிபாட்டு முறைகளில் சிலவாகும். ஆவணி சதுர்த்தி, விநாயக சஷ்டி ஆகியவை பிள்ளையாருக்குள்ள விரதங்களில் முதன்மை பெறுகின்றன.

தேவாரங்களில் பிள்ளையார் புகழ்பேசப்படுகிறது. அப்பர், திருஞானசம்பந்தர் ஆகியோர் பிள்ளையாரை 'கணபதி' என்று ஏத்துவர். சுந்தரர் பாட்டில் பிள்ளையார் புகழ் இரண்டு இடங்களில் பேசப்படுகிறது. திருமூலர் திருமந்திரத்தில் பிள்ளையார் புகழ் பாடுகிறார். தமிழ் இலக்கியம், திருப்புகழ், சேக்கிழார் பெரிய புராணம் ஆகியன பிள்ளையார் புகழ்பாடும்.

இத்தகு பிள்ளையாருக்கு பழமை வாய்ந்த கந்தளாய்க் கிராமத்தில் ஓராலயம் உண்டு. அது கந்தளாய் கட்டளைப் பிள்ளையார் என்று அழைக்கப்படுகிறது. அவ்வாலயம் ஆதிகாலத்தது மட்டுமன்றி, அற்புதம் வாய்ந்ததும் ஆகும். கந்தளாய்வாழ் மக்கள் கூறும் அற்புதங்கள் எத்தனை! எத்தனை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்கண் இவ்வூருக்குக் கந்தளாய் என்ற பெயர் வந்த வரலாற்றைச் சிந்திப்பது பொருத்தமாக இருக்கும். கி.பி. 1132 - 1153 காலப்பகுதியில் ஆட்சி செய்த கஜபாகு மன்னன் சமயப் பொறையின்மை காரணமாகச் சீற்றம் அடைந்து கர்வத்தினால் தனது பார்வையை இழந்தான். கோணேஸ்வரம் நோக்கிப் படையெடுத்து வந்த கஜபாகு வழியில் தனது கண்பார்வையை இழந்தான். பதறிப்போனான். பின்னர் தன் தவறை உணர்ந்து மனம் நொந்து, இறைவனைப் பக்தியால் ஏத்தினான்.

பிராமணர் வடிவில் தோன்றிய கோணநாயகர் கொடுத்த திருநீற்றினைச் சாத்திய கஜபாகு மன்னன் மீண்டும் கண்பார்வை பெற்றான். இதனால் கஜபாகு மன்னன் தான் கண்பார்வை பெற்ற இடத்தை கண்டழை என்று பெயரிட்டான். இந்த ஊர்ப் பெயரே திரிபுற்று கந்தளாய் ஆயிற்று.

அதே போன்று குளக்கோட்ட மன்னனின் திருக்கோயில் திருப்பணி சிவனடியார்களின் நெஞ்சத்தே ஓங்கி நிற்கும் நன்றி மறவாச் சிந்தனையாகும்.

கோயிலுக்கும், திருக்கோணேஸ்வரம், தம்பலகாமம் வாழ் மக்கள் நல்வாழ்வுக்கும் வயல்வெளி தந்தவன் குளக்கோட்டன். அதுமட்டுமன்றி அக்கழனிகளில் விளைச்சல் காண, விவசாயம் செய்ய திருக்குளம் கட்டியவன் சோழ வேந்தன் குளக்கோட்டன். கலியுகம் பிறந்த 517ஆம் ஆண்டில் பெரிய திருக்குளம் அமைக்கப்பட்டது. மகாவலி கங்கை நீரைத் தேக்கி வைத்தே இக்குளம் கட்டப்பட்டது.

கந்தளாய் குளம் கட்டப்பட்ட போது குளக்கோட்டன் விநாயகப் பெருமானை வழிபட்டே தனது பணிகளை ஆரம்பித்தான். இதற்கெனப் பிள்ளையார் பிரதிட்டை செய்யப்பட்ட ஆலயமே கந்தளாய்ப் பிள்ளையார் கோயில் என்று அறியும் போது சிவனடியார்கள் பெருமகிழ்வைக் கூறவும் வேண்டுமோ!

தம்பலகாமத்து விவசாயிகள் விதைப்பு, அறுவடைக்காலங்களில் ஆதி கோணநாயகரிடம் நேர்த்திக்கடன் செய்வர். மழை தேவைப்படும் போது வெயில் தேவைப்படும் போதும் இவ்வாறு நேர்த்திக்கடன் செய்வர். இது இங்கு இன்றும் நிகழும் மரபாகும்.

மழை வேண்டுங்கால் பச்சைப்பட்டும், வெயில் வேண்டுமங்கால் சிவப்புப் பட்டும் நேர்ந்து கட்டுவர். ஆதி கோணநாயகர் கோவிலில் இருந்து மங்கள வாத்தியத்துடன் பட்டினை எடுத்து வந்து கந்தளாய் குளக்கட்டுக்கு அருகாமையில் உள்ள கட்டளைப் பிள்ளையார் ஆலயத்தில் அத்திருவுருவத்தின் பாதங்களில் வைத்து இரவு முழுவதும் பூசை வழிபாடுகளில் ஈடுபடுவர். மறுநாள் காலை சூரிய உதயத்தின் போது அதனை எடுத்துச் சென்று கந்தளாய்க் குளத்தில் அதற்கென உரிய இடத்தில் அப்பட்டினைச் சாத்திப் பிரார்த்தனை செய்வர். இன்றும் இச்சமய நிகழ்வுகளும், இத்தகைய அற்புதமும் நிகழத்தான் செய்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய நிர்வாக சபை உறுப்பினர்களுடன் பழைய நிர்வாக சபை உறுப்பினர்கள்



S.கந்தசாமி - தலைவர் (2010), ச. விஜயராசா - பொருளாளர் (2013), பூபாலப்பிள்ளை - உறுப்பினர் - (2012)

## 2015 பரிபாலன சபை



இடமிருந்து வலம்:
பா. நிஜந்தன் (உறுப்பினர்), P. மயூரன் (உறுப்பினர்), T. ரவிச்சந்திரன் (பொருளாளர்), ஆ. சண்முகராசா (செயலாளர்), வ. இ. லோகானந்தம் (போசகர்), S. செல்வராஜா குருக்கள் (ஆலய பூசகர்), V. பிரதாபன் (உறுப்பினர்), T. பாக்கியராஜா (தலைவர்), வ. இ. சோமானந்தன் (உபதலைவர்)

சமூகமளிக்காதவர்கள்:
P. சிவநாதன் (உறுப்பினர்), A. ஜீவானந்தம் (கணக்காய்வாளர்), N. சதீஸ்குமார் (உறுப்பினர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'குளக்கட்டு கணபதியின் மகிமை'

திருமதி. ப. குணரெட்னம்
அதிபர் - கந்தளாய்
விக்னேஸ்வர வித்தியாலயம்

பார்தாங்கும் கோயிலும் பொன் மண்டபமும்
கோபுரமும் பாற்கு நாட்டி
ஏர் தாங்கு மாயனுக்கு அலங்கார
ஆலயம் ஒன்றியற்றி முற்றும்
கார்தாங்கு திருக்குளமும்
அனையும் கண்ட கண்டன்
சீர்தாங்கு குளக்கோட்டன் என்னும்
சோழ கங்கனைக் சிந்தையில் வைப்போம்

என்கின்றது தட்சண கையலாயப் பாரயிரப்பாடல் சிவபுரி என்று திருமூலரும் இலங்காபுரி என்று யோகர்சுவாமியும் போற்றிப் புகழும் தென்கைலை எனப் பெருமை பெறும் திருக்கோணமலைக்கும் கிழக்கிலங்கையின் தானியக் களஞ்சியம் என வர்ணிக்கப்பட்ட கந்தளாய்க்கும் இடையேயான நெருக்கமான பிணைப்பு இன்று நேற்று தோன்றிய தொன்றல்ல என்பதற்கு மேற்படி பயிரப் பாடல்கள் சான்று பகிர்கின்றது எனலாம்.

வற்றாத வளநதியாள் மகாவலியாளின் பொற்றாமரை சேர் புனல் வெள்ளம் வற்றாமல் பாய்ந்தோடி செம்மண்ணில் கலந்து செந்நெல்லை பொழிய வைக்கும் கந்தளாயின் தொன்மையும் பெருமையும் செம்மையும் வரையறைக்கு உட்பட்டதன்று. கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணநாயகனின் நித்திய பூசைகள் நித்தமும் சிறப்புற நடந்தேற கந்தளாய் குளத்தை கட்டுவித்த சோழாங்கன் எனப்படும் குளக்கோட்டன் குளத்தின் மடைதிறந்து வெள்ளம் கன்னல் வேலி சூழ் கழனி நிறையுமுன்னர் கருணை வேண்டி கட்டளைக் கணபதியினை பிரதிட்டை செய்து வழிபட்டதாக வரலாறு சான்று கூறுகின்றது. அதுவே இன்றும் குளக்கட்டுப்பதியாக கோயில் கொண்டு அருள் பாலிக்கும் கந்தளாய் பிள்ளையார் ஆலயமாகும்.

"நின்ற காலக் கண்ணீருளே
நிருபன் நெஞ்சு நினைவு மறந்து
அரச முறும் நேரம்....................."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனத் தெட்சண கைலாய புராணம் கூறுமாறு கோணேஸ்வரம் நோக்கிப் படையெடுத்த கஜபாகு மன்னன் கண்ணிழந்தான். பிராமணர் வடிவில் தோன்றிய கோணை நாயனார் கொடுத்த விபூதியை பூசியதன் மூலம் கண்தளைத்தமை நிகழ்ந்த இடமே 'கண்டழை' என்று கஜபாகு அழைத்தான். அதுவே இன்று கண்தளை என்று மருவி பின்னர் கந்தளாயாக பெருமையாகப் பேசப்படுகின்றது.

கந்தளாய் ஊரின் வாழ்விற்கும் வளத்திற்கும் நாளும் ஆளும் நாயகன் கணபதியே காரணம் எனலாம். பல்லின சமூகத்தின் குறைகளையும் குற்றங்களையும் களைந்து ஏற்றங்காண என்று அருள்பவன் எம்பெருமான் கணபதி. ஆணவம் முதல் மூன்றும் அடங்கியே அங்குசதுணை கொண்டு எங்குமே என்றுமே அருள் செய்யும் குளக்கோட்டுப் பதி நாயகனுக்கு இன்று குடமுழுக்குக் கண்டு குதூகலித்து வாழ்த்துகின்றேன்.

"வேழமுகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுந்து வாரும்"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையார் வழிபாடும், மகிமையும்

திருமதி. லிங்கேஸ்வரி ரவிராஜன்
அதிபர் - தி/பேராறு பரமேஸ்வரா ம.வி
கந்தளாய்

இந்துக்களின் வாழ்வியலில் சமயமும், வாழ்க்கையும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ளதை நாம் காண்கிறோம். எமது சமயம் பலவகையான தாக்கங்களுக்கு ஈடுகொடுத்து புத்துயிர் பெற்று வலிமை கொண்டு ஆன்மீக ஈடேற்றத்துக்கு எம் அனைவருக்கும் வழிகாட்டுகிறது. அந்த வகையில் தொன்று தொட்டு இன்றுவரை இந்துப்பணியையே முக்கியத்துவம் பெற்றுள்ள வழிபாடாக விநாயகர் வழிபாடு திகழ்ந்து வருகிறது.

விநாயகர் என்பதன் பொருள் தமக்கு மேலான வேறொரு தலைவர் இல்லாதவர் என்பதாகும். இதன்மூலம் சிவபெருமானுக்கும் விநாயகருக்கும் பேதம் இல்லை என்பதனை உணர முடிகிறது. என்னும் தல புராணங்களில் சிவன் உமையினை மூத்த திருக்குமரராக விநாயகர் குறிப்பிடுகிறார். அங்கு அவருக்கு வழங்கப்படும் திருநாமம் பிள்ளையார் என்பதாகும்.

பிள்ளையாரின் உருவம் பெருமையும், அருமையும் வாய்க்கப்பெற்றது என்பதற்கு அமையினமாக பல தடங்களை எடுத்துக் காட்டலாம். எமது சமயம் அந்நியரின் சமய அடக்குமுறைக்கு உட்பட்டு அழிவின் விளிம்பிற்கு சென்ற சமயங்களில் எம்பெருமானை மரங்களின் கீழும், ஆற்றங்கரைகளிலும் யாரும் அறிந்து கொள்ளாத அளவில் உருண்டைக் கற்களை வைத்து வழிபாடு என்பதனை நினைக்கும் போது இன்று வழிவிடும் பிள்ளையார் ஆலயங்களை வழிபடும் பக்தர்களின் பக்தியை என்னத் தோன்றுகிறது.

யானைமுகம், பருத்த நொந்தி வயிறு, மூன்று திருக்கண், இரண்டு திருவடி, இருந்த கோலம், முறிந்த கொம்பு அங்குசம் தாங்கிய வலதுகைகள் இரண்டு, பாசக்கயிறு, மோதகம் தாங்கிய இடக்கை இரண்டு, துதிக்கை ஆகிய ஐந்து திருக்கைகள் கொண்ட திருக்கோலத்தில் பெருச்சாளி வாகனத்தில் விநாயகர் வீற்றிருக்கிளார்.

இவ்வாறான இயல்புகளை தன்னகத்தே கொண்ட பிள்ளையார் ஆன்மாக்களை பீடித்துள்ள ஆணவமாகிய யானையை பாசம் எனும் கயிற்றால் கட்டி அங்குசத்தால் அடக்கி மறைத்தல் தொழிலை செய்பவர் என்பதினை உணர்ந்துவதற்காகவே அங்குசம், பாசிக்கயிறு ஆகியவற்றை தாங்கியுள்ளார். உலகத்தை உள்நின்று ஊறுபடுத்தும் அழிவுச் சக்திகளை அடக்கியாளும் திறமையுடையவர் பிள்ளையார். அத்தகைய அழிவுச் சக்திக்கு அடையாளமாக நிலத்தை துளைத்து ஊறுபடுத்தும் பெருச்சாளி அவரது வாகனமாக அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயகர் ஓம் எனும் பிரணவ வடிவத்தின் ஓமிலிருந்தே இந்த உலகமும் அண்ட சராசரங்களும் தோன்றின என கூறப்படுகின்றது. நாம் எந்தக் காரியத்தை தொடங்குவதற்கு முன்பும் விநாயகரை வழிபட்ட பின்னரே ஆரம்பிக்கின்றோம். இறை வழிபாட்டின் ஆரம்ப கிரியைகளில் பஞ்சாயதன பூசை இடம்பெறும். இது விநாயகரை குறிக்கின்றது. இந்நிலையில் விநாயகர், விஷ்ணு, சிவன், பார்வதி, சூரியன் எனும் ஐந்து மூர்த்திகளையும் உபாசித்து வணங்குவர். மக்கள் மனத்தில் காரிய சித்திக்கு உரியவர் விநாயகர் என்பது அதித நம்பிக்கையாகும்.

எக்கருமத்தை தொடங்குவதற்கு முன்பும் விக்கினங்களை நீக்கி அருளும் விநாயகர் வழிபாடு இடம்பெறுவது நாம் எமது சமய மரபில் காணப்படும் ஓர் சிறப்பான அம்சமெனலாம். பிரணவப் பொருளாய் அமைபவர் பிள்ளையார். ஓம் என்பது பிரணவ மந்திரம் ஓடிந்த கொம்பிலிருந்து பிரணவ சுழி ஆரம்புமாகிறது. இது ஓங்காரம் எனப்படும். இந்த ஓங்கார உருவமே விநாயகரின் வடிவமாகும். நாம் எச் செயலை தொடங்கும் போதும் அச்செயல் செம்மையாக நிறைவடைய வேண்டும் என்பதற்காக விநாயகர் துணையை நாடி 'உ' என்று எழுத்தை எழுதி தொடங்குகிறோம். உ என்ற அடையாளம் சிவன், சக்தி என்ற இரண்டையும் அடக்கியுள்ளது. வட்டம் சக்தியையும், கோடு சிவத்தையும் குறிக்கின்றது. ஊமை எழுத்து என்றும் மூலமனு என்றும் பிள்ளையார் சுழி என்றும் இதனை வழங்குவர். இது மோனமே குறியாக முதலெழுத்தருளிய என்று கந்த புராணத்தில் சிறப்பிக்கப்படுகிறது.

பிள்ளையார் பிரணவ வடிவினர் என்பதால் பிரணவ வடிவம் கொண்ட பொருள்கள் அவருக்கு நிவேதிக்கப்படுகிறது. மோதகம், தேங்காய், மாதுளம்பழம் என்பவற்றுடன் அவர் சத்துவ குணம் படைத்தவர் என்பதால் பால், தேன், சர்க்கரை, பருப்பு, அவல் முதலிய உணவுப் பதார்த்தங்கள் நிவேதிக்கப்படுகின்றது. இவற்றிற்கு மேலதிகமாக விருப்பதற்குரிய நிவேதனங்களாக முளை இழந்த கடலை, அவல், பொரி என்பனவும் வழங்கப்படுகின்றன. இதன் பொருள், தன்மை, வழிபடுவோரின் வினைப்பயன் அழிக்கப்பட்டு பிறவித் துன்பம் முளை இழந்து பேரின்ப நிலையை ஆன்மா அடைவதைக் குறிக்கிறது.

கபில நாயனார் விநாயகர் வணக்கத்தை கீழ் கண்டவாறு குறிப்பிடுகிறார்.

திருவாக்கும், செய்கருமமும் கைகூடும் - செஞ்சொற்
பெருவாக்கும் வீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானை
காதலாற் கூப்பூவார் - தம்கை

கணபதி எனும் பெயர்பெறுகின்ற விநாயகர் பதினெட்டு கணங்களுக்கும் தலைவர். இவருக்கு சித்தி, புத்தி என இரு சக்திகள் உண்டு என புராணங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுகின்றன. எனினும் பிள்ளையார் பிரமச்சாரியாகவே ஆலயங்கள் தோறும் எழுந்தருளியிருப்பதை நாம் காண்கிறோம். இதன் உட்கருத்து தத்துவக் கூற்று என்ன என்பதனை நோக்கின் சித்தி என்பது எடுத்த கருமங்களில் வெற்றிபெறும் தன்மையினையும், புத்தி என்பது அறிவு, விவேகம், உள ஆற்றல்களை தரவல்லது. வாழ்வில் சகல சித்திகளையும் தந்து வெற்றியின் உயர்விற்கு விநாயகர் மூலாதாரமாகவுள்ளார் என்பதனை உணர்த்துகிறது.

விக்கினங்களை தீர்ப்பவராக உள்ளன்போடு வழிபாடு செய்வோருக்கு அவர்களின் அறியாமை அகன்று அவர்களிடம் அறிவொளியினை ஏற்றுவார். சித்தி, புத்தி விநாயகரின் அருட்சக்திகளாகும். விநாயகரின் திருவுருவத்தினை பசுவின் சாணத்தினாலோ மஞ்சளினாலோ பிடித்து அறுகம் புல்லை அதன்மீது செருகி வணங்க வேண்டும். அறிவு சொருபியாகிய விநாயகர் எளிமையானவர் என்பதனை இது குறிக்கிறது. அறிவிருக்கும் இடத்தில் எளிமையும், அன்பும் இருக்கும். இதனைவிட மங்கல காரியங்களில் பூரண கும்பம் வைக்கும் போது முதற் காரியமாக பிள்ளையார் பிடித்து வைத்து பூசிக்கும் வழக்கம் எம்மவரால் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இலங்கை திரு நாட்டிலும் ஊர்கள் தோறும் பிள்ளையாருக்கு ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவைகளில் ஆகம முறைபடி அமைக்கப்பட்ட ஆலயங்களும் காணப்படுகின்றன.

பிள்ளையாரை வணங்கினால் வாழ்வில் எடுத்த முயற்சிகள் யாவும் நிறைவு பெறும் என்ற நம்பிக்கையுடன் வாழும் மக்களின் நம்பிக்கை ஒரு பொதும் வீண் போவதில்லை. இது நம்பினோர் கைவிடப்படார், நம்பினோர் கெடுவதில்லை என்ற நான்கு மறை தீர்ப்பாக அமைகிறது. வாழ்க்கை வசதிகள், மருத்துவ வசதிகள் அற்ற காலங்களிலும் மக்களின் வாழ்விற்கு மேற்குறித்த நம்பிக்கையே உந்து சக்தியாக அமைந்தது.

விநாயகர் இயல், இசை, நாடகத்தின் வித்தகர் என நாம் கூறலாம். விநாயகர் முத்தமிழை வளர்த்தவர் என ஔவைப் பிராட்டி கூறுகிறார். துங்கக் கரிமுகத்து தூமணியே நீ எனக்கு சங்கத் தமிழ் மூன்றும் தா என பிரார்த்தித்து இறைஞ்சி நிற்பதை காண்கிறோம். வாழ்வியலுடன் இரண்டறக் கலந்த முத்தமிழ் முதல்வன் விநாயகர் என்பதை மறுப்பதற்கு இல்லை.

பிள்ளையார் விரும்புவது அறுகம்புல். அர்ச்சனை செய்வதற்கு உகந்த அறுகு ஒரே காலத்தில் மூன்று கவருடையதாக இருக்க வேண்டும். எடுத்த காரியங்கள் எவ்வித விக்கினமுமின்றி வெற்றி பெற வேண்டும் என விரும்புபவர் மனம், வாக்கு, காயம் ஆகிய முக் கரணங்களையும் அடக்கியாளும் திறன் உடையவராக இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை விட பிள்ளைகளுக்குரிய கடவுள் பிள்ளையார் என்பதனால் அவருடைய தேரினைப் பிள்ளைகள் இழுப்பதும் நேர் கடனாக உடைக்கப்படும் சிதறு தேங்காயை பிள்ளைகள் பொறுக்கி களிப்புற்று உண்பதும் வழக்கில் உள்ளது. இதனால் தான் பிள்ளையார் பிள்ளைகளுக்கெல்லாம் பிள்ளை எனக் குறிப்பிடப்படுகிறார்.

விநாயகர் பன்னிரெண்டு திரு அவதாரம் பெற்றவர். அதில் ஒரு அவதாரம் காசிப்படணத்தில் செய்திருந்த போது எல்லோருடைய வீட்டிலும் ஏக்காலத்தில் விருந்தமுது கொண்டருளினார். அன்று முதல் யாவரும் அவரவர் வீடு தோறும் வைத்து பூசிக்கும்படி அனுக்கிரகம் செய்தருளினார்.

பிள்ளையாருக்கு வழங்கப்படும் மறுபெயர்கள்

| | | |
|---|---|---|
| கணபதி | - | பதினெட்டுக் கணங்களுக்கு தலைவர். |
| கணேசர் | - | மனோ வாக்குகளும் கடந்த நிலையிலுள்ளவர். |
| விநாயகர் | - | தனக்கு மேலான வேறொரு தலைவர் இல்லாதவர். |
| வக்கிரதுண்டர் | - | கொடிய ஆசைகளை துண்டிப்பவர். |
| விக்னேஸ்வரர் | - | தன்னை நினைப்பவர்களது இடையூறுகளை தீர்க்க வல்லவர். |
| இலம்போதரர் | - | அறிவுக்கு புலனான பிரபஞ்சம் முழுவதையும் தனக்குள் அடக்குபவர். |

இவ்வாறான பெருமைகளை கொண்ட பிள்ளையாருக்கு சிறப்பான விரதங்கள் காணப்படுகின்றன. அவற்றை மெய்யன்போடு பக்திப்பரவசமாக அனுஸ்டிப்பதன் மூலம் பிள்ளையாரின் அனுக்கிரகத்தை பெறலாம்.

விநாயகர் சதுர்த்தி
விநாயகர சுக்கிரவார விரதம்
பிள்ளையார் கதை
சங்கடஷர சதுர்த்தி விரதம்

இவ்வாறு விநாயகரை வழிபடுவதன் மூலம் மனித மனங்கள் தூய்மையாகும், ஆன்மீக வாழ்வு பெருகும், தேவையற்ற ஆசைகள் அற்றுப் போகும், உள்ளம் உறுதியாகும், பொருட்செல்வம், கல்விச் செல்வம், சந்தான பாக்கியம் உட்பட சகல நன்மைகளையும் பெறுவார்கள். நாமும் விக்கினம் தீர்க்கும் விநாயகரை வழிபட்டு பேரின்பப் பெருவாழ்வு பெறுவோமாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிங்கம்



அம்பாள்



## கணபதி கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவூஞ்சல்

ஞானசிரோன்மணி பண்டிதர்
இ. வடிவேல்

## காப்பு

மூத்த விநாயகனே மூலமுதற் பொருளே
காத்தருளும் கணபதியே கந்தளையில் - தீர்த்தநிறை
குளத்தருகே கோயில் கொண்ட குஞ்சரமுகத்தோனே
உளத்தமர்ந்து ஊஞ்சலினைத் தா

## ஊஞ்சல்

1. சீரோங்கு நால்வேதக் கால்கள் நாட்டி
சிறந்த சிவாகமங்களெனும் விட்டம் பூட்டி
ஏரோங்கு மரகதத்தால் வடங்கள் கட்டி
எழிலோங்கும் வைரமணி மாலை தூக்கி
பாரோங்கும் ஐந்தெழுத்தே பலகையாகப்
பகருமுயர் ஓங்காரப் பீடமீதே
காரோங் கந்தளையில் வந்தமர்ந்த
கட்டளைப் பிள்ளையாரே ஆடீரூஞ்சல்

2. இந்திரனும் சந்திரனும் வடந்தொட்டாட்ட
இறையவனும் உமையவளும் வடந்தொட்டாட்ட
கந்தமலி மலரனும் வடந்தொட்டாட்ட
கார்வண்ணத் திருமாலும் வடந்தொட்டாட்ட
சுந்தரஞ்சேர் திருமகளும் வடந்தொட்டாட்ட
சுருதி புகழ் கலைமகளும் வடந்தொட்டாட்ட
கந்தருவர் கின்னரரும் வடந்தொட்டாட்ட
கந்தளாய் பிள்ளையாரே ஆடீரூஞ்சல்

3. முத்துமணி பதித்தபொன் மகுடம் மின்ன
முப்பரிநூல் பதக்கமொடு மார்பில் மின்ன
கைத்தலத்தே கங்கணங்கள் கவினாய் மின்ன
கனகமணி மாலைகளும் கழுத்தில் மின்ன
உத்தரியம் தோள்களிலே ஓங்கி மின்ன
உயர்ந்தசெந் தாமரையின் மாலை மின்ன
வைத்தபுகழ்க் குளக்கோட்டு மன்னன் வைத்த
கட்டளைப் பிள்ளையாரே ஆடீரூஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. கந்தனுக்கு முன்பிறந்த கணநாதாவுன்
கனகமணி மகுடமது முடிமீதாட
பந்தமறப் பாசமொடு அங்குசமுமாட
பக்தியொடு சித்திபுத்தி சேர்ந்தேயாட
சொந்தி வயிறாடத் துதிக்கையாட
தூயதிரு வடியாடத் தொடைகளாட
கந்தமலி சோலைகள் சூழ் கந்தளாயில்
கட்டளைப் பிள்ளையாரே ஆடீரூஞ்சல்

5. பண்ணிசைத்துப் பாசையர்கள் பாடியாட
பக்தியுடன் பாரதியும் யாழிசைக்க
கன்னல் மொழிக் காரிகையார் தாளம் போட
கவின்பெறவே அரம்பையர்கள் நடனமாட
எண்ணரிய வேதரமலர் மாரிபெய்ய
எத்திசையும் பக்தருன்னை ஏந்திநிற்க
மண்ணிலுயர் கோணமலைக் கந்தளாயில்
கட்டளைப் பிள்ளையாரே ஆடீரூஞ்சல்

6. மண்ணவரும் விண்ணவரும் போற்றி செய்ய
மாதுளையாள் நாதனொடு வாழ்த்தி நிற்க
எண்ணரிய தேவர் புகழ் பாடிநிற்க
ஏந்திழையார் காளாஞ்சி ஏந்திநிற்க
கன்னல் பொழிக் காரிகையார் கவரிவீச
கலைமகளுந் திருமகளும் தீப மேந்த
மன்னவர்கள் போற்றுமுயர் கந்தளாயில்
கட்டளைப் பிள்ளையாரே ஆடீரூஞ்சல்

7. விக்கினங்கள் வாராமற் காக்கும் ஞான
விநாயகனே விமலனே ஆடிரூஞ்சல்
மிக்கவலிக் கஜமுகனைப் போரில் வென்ற
வேழமுகப் பரம்பொருளே ஆடீரூஞ்சல்
வக்ரதுண்ட லாரணரே ஆடீரூஞ்சல்
வல்லபைதன் மணவாளா ஆடீரூஞ்சல்
எக்காலுங் கந்தளாய்க் குளத்தைக் காக்கும்
கட்டளைப் பிள்ளையாரே ஆடீரூஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. காடெலாம் நடாக்கிக் கமங்கள் செய்யக்
கந்தளாய்க் குளமெடுத்த கோட்டு மன்னனை
நாடெல்லாம் நீர்பாய வடிகால் வெட்டி
நலம்பெறவே மக்களையுங் குடியமர்த்தி
பாடெலாம் பட்டுதிருப் பணிகள் செய்து
பயனெலாங் கோணேசர்க் காக்கி வைத்த
நீடுபுகழ்க் குளக்கட்டைக் காத்தமர்ந்த
கட்டளைப் பிள்ளையாரே ஆடீரூஞ்சல்

9. எமைநாளுங் காத்தருள வேண்டுமென்று
குளக்கோட்டன் எடுத்ததிருக் கோவில் தன்னில்
இனையோரும் அறியவொண்ணாப் பிள்ளையாரே
இனிதாக வந்தமர்ந்து என்றுங்காத்தாய்
அமைவாகக் குளக்கட்டில் செய்யும் வேள்வி
அத்தனையும் ஏற்றுமழை வளமுந்தந்தாய்
உமைபாகன் கோணேசர் உவந்தளித்த
கட்டளைப் பிள்ளையாரே ஆடீரூஞ்சல்

10. ஆலமுண்ட கண்டரொடு அந்தணரும் வாழி
அம்மைமுத்து மாரியொடு ஆனினமும் வாழி
சீலறும் தொண்டர்குழாஞ் சேர்ந்து வாழி
சிறந்தோங்கு கந்தைவாழ் மக்கள் வாழி
பாலகரும் பாவையரும் பக்தர்களும் வாழி
பாட்டிசைத்துப் போற்றுகின்ற பாவலரும் வாழி
காலமெல்லாங் கந்தனைக் காத்தமர்ந்த
கந்தளாய்ப் பிள்ளையாரே வாழி வாழி

## எச்சரிக்கை

1. ஓங்காரத்தின் உருவாய்வரும் ஒளியே எச்சரிக்கை
உன் பாதமே தஞ்சமெவை ஆள்வாய் எச்சரிக்கை

2. ஆங்காரங்கொண் டமராடிய அசுரன் கஜமுகனை
அழித்தெயவன் அகந்தைகெடச் செய்தாய் எச்சரிக்கை

3. அன்னை தந்தை உலகமெலாம் ஆனரவ ரென்றே
பொன்னார்திரு வடிபூசித்த பொருளே எச்சரிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பொன்னேபரம் பொருளேயெனப் போற்றும் குளக்கோட்டன்
என்னாளும்வந் துனைவந்திக்க வருவாய் எச்சரிக்கை

5. காராளர்கள் சூழ்ந்துவாழும் கந்தளாய்ப் பதியதனில்
நீரோடவும் ஏரோடவும் செய்வோம் எச்சரிக்கை

6. சீரார்திரு கோணேஸ்வர் சிந்தை மகிழ் வெய்த
ஆராதனை செய்யவளர் ஐயா எச்சரிக்கை

## பராக்கு

1. திருவோங்கு கந்தளாய் தேவே பராக்கு
செய்யதிருக் கோவிலமர் செய்தாய் பராக்கு

2. அருவாயும் உருவாயும் ஆனாய் பராக்கு
ஆனந்த வடிவாய் அமர்ந்தாய் பராக்கு

3. தந்தைரதம் அச்சிறுத்த தனையா பராக்கு
கந்தனுக்கு முன்பிறந்த கணபதி பராக்கு

4. தந்தமொன் றால்மேரு மாமலையின் மீதே
சந்தமுறு பாரதம் பதித்தாய் பராக்கு

5. மண்ணவரும் விண்ணவரும் வாழ மறைவாழ
எண்ணறிய தமிழ்வாழ உதித்தாய் பராக்கு

6. கண்ணுதற் கடவுள்தரு கஜமுக பராக்கு
கண்கண்ட தெய்வமே காப்பாய் பராக்கு

## லாலி

லாலி லாலி லாலி லாலி லாலி
லம்போதர தும்பிமுக லாலி லாலி

1. விக்கினங்கள் தீர்ப்பவரே லாலி லாலி
வேழமுகத் தைங்கரனே லாலி லாலி

2. மிக்கபுழ் கந்தளையிற் கோவில் கொண்ட
விக்கினேல் வரப்பெருமான் லாலி லாலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. ஔவைக்குப தேசஞ் செய்தே அருள்புரிந்த
ஆனைமுக ஐங்கரனே லாலி லாலி

4. பானைவயிற் தேசஞ்செய்தே அருள்புரிந்த
பைந்தமிழைக் காப்பவரே லாலி லாலி

5. மூஷிக வாகனனே லாலி லாலி
முத்திதரும் வித்தகனே லாலி லாலி

6. பாசவினை வேரறவே பக்தரைக் காக்க
பாசமொடு அங்குசமுங் கொண்டாய் லாலி

மங்களம்

மங்களம் மங்களம் மங்களம் ஜெய ஜெய
மங்களம் மங்களம் மங்களம்

1. அங்குச பாசம் பிடிக்கும் ஆனைமுக வள்ளலுக்கும்
சங்கத்தமிழ் மூன்றுந்தரும் ஐங்கரற்கும் மங்களம் (மங்)

2. கோணமலை நாதருக்கும் மாதுமையாள் நாயகிக்கும்
ஆறுமுக வேலவர்க்கும் வள்ளிதெய்வ நாயகிக்கும் (மங்)

3. கந்தளையிற் கோயில் கொண்ட முத்துமாரி அம்மனுக்கும்
கடுவிஷத்தை நீக்கவல்ல நாகருக்கும் வைரவர்க்கும் (மங்)

4. குளக்கோட்டு மன்னனுக்கும் கோவிற்பணி செய்தவர்க்கும்
விளக்கேற்றித் தொண்டு செய்யும் அடியவற்கும் யாவர்க்கும் (மங்)

5. அந்தணர்க்குந் தொண்டருக்கும் அழகுவிழாச் செய்பவர்க்கும்
சந்ததமும் வந்துதுதி செய்யும் பல மாந்தருக்கும் (மங்)

6. முத்திக்கு வித்தாகிச் சித்தி புத்தி சேரவந்து
பக்தர்தமைக் காத்தருளும் சித்தி விநாயகர்க்கும் (மங்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வரலாற்று சிறப்புக் கொண்ட கந்தளாய் பிள்ளையார் ஆலயம்"

திரு. இ. ந. வரதன்
சட்டதரணி

## வரலாற்றுச் சிறப்பு மிக்க கோவில்:

திருக்கைலாயம் என வழங்கப்படும் திருக்கோணமலை மண்ணின் வளத்திற்கு பெருமை சேர்க்கும் கிராமங்களில் கந்தளாய் கிராமமும் ஒன்றாகும். கந்தளாய் கிராமம் திருக்கோணமலை மாவட்டத்தில் ஒரு பூர்வீக தமிழ் விவசாய கிராமமாகும். இதிகாசங்களிலும், ஆய்வாளர்கள் வெளிப்பாட்டிலும், காலம் சென்ற முதியோர்களின் (பரம்பரை) வாய்மூல தகவல்களிலிருந்தும் கந்தளாய் குளத்தை நிர்மாணித்த குளக்கோட்ட மன்னனால் முதல் முதலில் கந்தளாய் பிள்ளையார் கோவிலானது கட்டப்பட்டு பிள்ளையார், அம்பாள் விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. மேலும், இவ் ஆலயம் 1874ஆம் ஆண்டு முதல் அடியார்களின் நிதி உதவியாலும், முயற்சியாலும் கட்டப்பட்டு நித்திய பூஜைகள் நடைபெற்றுக் கொண்டு வந்துள்ளன என்பதற்கான வரலாற்று ஆதாரங்கள் உள்ளன.

கந்தளாய் குளத்தின் நீர்பாசனத்தின் கீழ் காணிகளிற்கு உரித்துடையவர்களாக இருந்தவர்கள் அல்லது விவசாயம் செய்த சகல விவசாயிகளும் இவ்வாலயத்தின் முன்னேற்றத்திலும், அதன் நிர்வாகத்திலும் அக்கறையாக இருந்துள்ளனர் என்பது உண்மையாகும். இன்று இந்நிலைமைகள் மாறிவருவதும், வெளிமாவட்ட மற்றும், வெளிநாடுகளில் வாழும் சைவசமய நலன் விரும்பிகளின் உதவியுடனும், ஒத்தாசையுடனும் ஆலயம் பரிபாலிக்கப்படுவதும், ஆலய கட்டிட வேலைகள் நடைபெறுவதும் மிகவும் கவலைக்குரிய ஒரு விடயமாகும்.

## கோவிலின் அமைவிடம்:

இவ்வாலயம் கந்தளாய் குளக்கட்டின் அடிவாரத்தில் நாற்புறமும், நீரால் சூழப்பட்ட இடத்தில் அமைந்திருந்தது என்பது பூர்வீகம். ஆனால் 1986ஆம் ஆண்டில் கந்தளாய் குளக்கட்டு உடைப்பெடுத்தபின் கோவிலை நாற்புறமும் சுற்றியோடிய அருவிகளின் பாதை தற்போது சற்று மாறுபட்டு ஓடுகின்றன.

## சைவமக்களின் பூர்வீக நம்பிக்கை:

குளக்கட்டை பாதுகாப்பதற்கும், கிராமத்து வயல்களுக்கு தண்ணீர் ஒழுங்காக பாய்வதற்கும் கந்தளாய் பிள்ளையார் என்றும் துணையாக நின்று அருள்பாலித்து வருகின்றார் என்ற நம்பிக்கை கந்தளாய் சைவ மக்களிடம் மட்டுமல்லாது, இக்கோவிலில் அக்கறையுள்ள சைவ மக்களின் நம்பிக்கையுமாகும். அதுவே உண்மையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கோவிலுக்குரிய வயல்காணிகள்:

இவ்வாலயத்திற்கு எந்தவிதமான நிரந்தர வருமானமும் இல்லாத சூழ்நிலையில் 1906ஆம் ஆண்டில் இக்கோவிலின் முகாமையாளராக இருந்த கந்தளாய் வாழ் இரத்தினசபாபதியின் தகப்பனார் அமரர் கந்தரப்பர் வல்லிபுரம் அவர்களால் அவரது சொந்தப் பணத்தில் ஒரு வயல்காணி ஆங்கில ஆட்சியாளரிடமிருந்து வாங்கப்பட்டது. (வரைபடத்தில் காணி துண்டுகள்: 87891 உம் 87892, பீபீ தி.பி 236200). அக்காணியின் விஸ்தீரணம் 07 ஏக்கர் - 01 றூட்- 28 பேச்சர்ஸ் ஆகும். அக்காணி 'கோவில்வயல்' என்று பெயரிடப்பட்டு வழங்கப்படுகின்றது.

அமரர் கந்தப்பர் வீரகத்தி அவர்களால் அவரது சொந்தப்பணத்தில் (வரைப்படத்தில் காணி துண்டு: 87900) 00 ஏக்கர் - 01 றூட் - 32 பேச்சர்ஸ் விஸ்தீரணம் கொண்ட வேறு ஒரு காணி வாங்கப்பட்டு கோவில் வயலுடன் இணைக்கப்பட்டது. (கந்தப்பர் வீரகத்தி வல்லிபுரம் அவர்களின் சகோதரர் ஆவார்).

தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயத்திற்கும், இவ்வாலயத்திற்கும் தொன்று தொட்டு இருந்து வந்த பாரம்பரிய தொடர்புகளினால், அவ்வாலய நிர்வாகம் கந்தளாய் குளத்தின் நீர்பாசனத்திட்டத்தின் கீழ் உள்ள ஐந்து (05) ஏக்கர் வயல் காணியொன்றை கந்தளாய் பிள்ளையார் ஆலயத்திற்கு நிரந்தரமாக பாரப்படுத்தி, வருடாவருடம் ஏலத்தில் விடப்பட்டு அதிலிருந்து வரும் வரும்படிகள் மூலம் தந்தளாய் பிள்ளையார் கோவிலிற்குரிய நித்திய பூசைகளும், மற்றயவிடங்களும் நடைபெறுவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது. இக்கோவிலின் நிர்வாகத்திற்குரிய பணத்தின் முக்கிய பகுதி தம்பலகாமம் மக்களிடமிருந்தும், ஆதிகோணேநாயகர் ஆலயத்தின் மூலமும் முன்னைய காலங்களில் வந்து கொண்டிருந்தது என்பது வரலாறு.

சோக சம்பவம்:

1986ஆம் ஆண்டில் கந்தளாய் குளக்கட்டு உடைப்பெடுத்ததன் காரணமாக இப்பாரம்பரிய கிராமம் அழிந்ததுடன் ஆலயம், பாடசாலை என்பவற்றுடன் அறுபத்தி நான்கு கிராமவாசிகளின் உயிர்கள் காவுகொள்ளப்பட்டு சொல்லொண்ணாத்துயரத்தில் ஆழ்த்தியது. இச்சம்பவம் இன மத பேதம் பாராது யாவருக்கும் அளப்பெரிய துன்பத்தை கொடுத்த ஒன்றாகும்.

எவ்வாறாயினும் அவ்வாலயத்திற்கு உரித்தான புராதன பிள்ளையார், அம்பாள் விக்கிரகங்கள் கிராமம் புனரமைப்பு செய்யப்படும் போது நீர்ப்பாசனத் திணைக் களத்தினால் திரும்பவும் பெறப்பட்டு, எவ்வித பேதமின்றி கிராமத்தவர்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணமலை மாவட்ட மக்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சைவசமய நலன் விரும்பிகளின் உதவியுடனும், ஒத்தாசையுடனும் ஆலயம் முன்பு இருந்த இடத்திற்கு அருகாமையில் தற்போதய ஆலயத்தை அமைத்து 1999 ஆண்டு பிரதிஷ்டை செய்யப்பட்டது.

**கோவிலிற்கான அண்மைக்கால கட்டட அபிவிருத்திகள்:**

காலக்கிரமத்தில் இவ்வாலயத்திற்குரிய பொதுவான அத்தியாவசிய அபிவிருத்தி வேலைகளுடன் சிறு, சிறு கட்டட வேலைகளும், கோவில் ஐயரிற்குரிய வாசஸ்தல கட்டட வேலைகளும் இடம் பெற்றுள்ளன.

ஆலயத்தின் கட்டிடங்களைப் பொறுத்தவரையில் பல அத்தியாவசிய அபிவிருத்திகள் செய்யப்பட வேண்டிய தேவைபாடுகள் இருந்ததினால் மீண்டும் இனமதபேதமின்றி முன்புபோல் சகலரினதும் உதவியுடனும், ஒத்தாசையுடனும் இவ் ஆலயம் திரும்பவும் 2013ஆம் ஆண்டில் இருந்து 2015ஆம் ஆண்டுவரை புனருத்தாரண வேலைகள் நடைபெற்று 2015ஆம் ஆண்டு வைகாசி மாதம் 01ஆம் திகதி கும்பாபிஷேகம் செய்ய அருள் கிட்டியுள்ளது என்பது மகிழ்ச்சிக்கும், பாராட்டிற்கும் உரிய ஒரு விடயமாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிட வாழ்வியலிலே விரதங்களும் / பண்டிகைகளும்

திரு. H. மகேந்திரராஜா
மாவட்ட கலாச்சார உத்தியோகத்தர்
கச்சேரி - திருக்கோணமலை

சித்தாகிய அறிவை கொண்டு வாழும் உயிரினமே மனித சமுதாயமாகும். இப்பிரபஞ்சத்திலே எண்ணிலடங்காத ஜீவராசிகள் வாழ்கின்றன. இதில் இறைவனால் தோற்றுவிக்கப்பட்ட மேலான பிறவிகளில் மனித பிறவியே மேலான பிறவியாகும். இறைவனை உணரவும் இவ்வுலகிலே அவனருளால் அவன் தாழ் பணிந்து அறத்தைக் காத்து வாழ்கின்ற வரப்பிரசாதிகள் எனக்குறிப்பிடலாம்.

சமயம் வழிபாடு என்பன மானிட வாழ்க்கையில் வாழ்கைப் படிமுறைகளையும் நெறிகளையும் கடைப்பிடித்து வாழ வழி செய்வதேயாகும். ஆன்மீகம் இல்லா வாழ்வு அழிவைத் தரும் என ஞானிகள் குறிப்பிடுகின்றனர். மனிதன் மனிதனுக்காகவே படைக்கப்படுகின்றான். மானிடநேயத்தைக்காப்பது மனிதனின் கடமையாகும்.

இந்துமக்களை பொறுத்தவரையில் பிறப்பு முதல் இறப்புவரை பல சடங்கு முறைகள் சம்பிரதாயங்கள் போன்ற பல விடயங்கள் உள்ளன. இவற்றுள் விரதங்களும் / பண்டிகைகளும் அடங்குகின்றன. மனிதனிடமுள்ள விலங்குணர்வை குறைப்பதற்கும் தெய்வீக இயல்புகளை அதிகரிக்க செய்யவும் விரதங்கள் துணைநிற்கின்றது. மனம் பொறிவழி போகாது உணவை விடுத்தேனும், சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகாரணங்களாலும் இறைவனை வழிபடுவது விரதமெனக் கூறப்படுகிறது. விரதம் என்பது சாதாரண வழிபாடு அல்லை ஒரு தவமாகும்.

பொறிவழி சென்று கட்டுப்பாடற்ற வகையிலே விரதம் அனுஸ்டிப்பது உடம்மை பட்டினிபோடுவதேயாகும். பயன் ஏதும் கிடைக்கப்போவதில்லை. எனவே விரதமானது மனதைக்கட்டுப்படுத்தி வழிபடுவதாகும். விரதம் அனுஷ்டிப்பதால் மிகையான உணவுண்ணல் உடலில் அதிக ஓமொன்கள் சுரத்தல் மற்றும் பல நோய்கள் கட்டுப்படுத்தப்படுவதாக விஞ்ஞான விளக்கம் சொல்லப்படுகிறது. இந்துமக்கள் அனுஷ்டிக்கும் விரதங்கள் பல உள்ளன. சதுர்தசி, பிரதோஷம், சித்திரை பௌர்ணமி, ஆடிச்செவ்வாய், ஆவணிஞாயிறு, புரட்டாதிச்சனி, ஐப்பசிவெள்ளி, கார்த்திகைத் திங்கள், கந்தஸஷ்டி, வினாயகர்காப்பு, கேதாரகௌரிவிரதம், சிவராத்திரி, நவராத்திரி போன்ற பல விரதங்களை குறிப்பிடலாம்.

மனிதன் ஒரு சமூகபிராணி தான்வாழும் சமூகத்தோடு ஒத்துவாழ்பவனே மனிதனாவான். சமூக குடும்பத்தில் மகிழ்ச்சியும் ஒருங்கிணைவையும் ஏற்படுத்துவதே பண்புகளாகும். இறைவன் சிலருக்கு செல்வம் வசதி வாய்ப்புக்களை கொடுக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றை தர்மவழியில் அனுபவிப்பவன் நிலைத்து வாழ்கின்றார். அதர்மம் என்றும் நிலைப்பதில்லை தர்மம் என்றும் நிலைத்து வாழும். புராணக் கதைகள் இதனை மிகவும் தெளிவுபடுத்துகின்றன. சூரபற்மன் சிவபெருமானை தவம் செய்து அழையாத வரத்தைப் பெற்றான். சகல சௌபாக்கியங்களையும் பெற்றான். இதனை அதர்ம வழியில் பயன்படுத்தியதனால் முருகப் பெருமானால் சங்காரம் செய்யப்படுகிறான். இக்கதையை கந்தப் புராணம் எடுத்துக் கூறுகிறது.

மாசிடா சூரனை அம்பிகை வதம் செய்தாள். கயமுகா சூரனை விநாயக் பெருமான் வதம் செய்தார். இவை அனைத்தும் அறம் பிழைத்தோருக்கு ஏற்பட்ட நிலையை எடுத்துக் கூறுகின்றது. விஷ்ணு பகவான் நரகா சூரனை வதம் செய்த நாளை தீபாவளிப் பண்டிகையாக கொண்டாடப்படுகிறது. பண்டிகைகள் குடும்ப மகிழ்ச்சி சமுதாய மகிழ்ச்சி சமுதாய ஒற்றுமை புரிந்துணர்வு என்பவற்றிற்கு உறுதுணையாகின்றது. இந்துக்களின் முக்கிய பண்டிகைகளாக சித்திரைப் புத்தாண்டு, தைப்பொங்கல், தீபாவளி போன்றதனைக் குறிப்பிடலாம்.

விரதங்கள், பண்டிகைகள் அனைத்தும் மனிதன் மனிதனாக வாழவேண்டும் என்பதற்காகவே கடைப்பிடிக்கப்படுவதாகும். ஒரு மனிதனுடைய வாழ்வு முழுமை அடைவதற்கு மூன்று வகையான பலம் தேவைப்படுகிறது. உடற்பலம், மனோபலம், ஆத்மபலம். உடற்பலம் மாத்திரம் காணப்படின் அது விலங்கிக் கொப்பானதாகும். நினைத்ததைச் செய்யக்கூடிய மனோபலம் வேண்டும் மேற்படி இரண்டு பலமும் போதாது எமை அறவழியில் நடத்திச் செல்ல இறைபலம் தேவைப்படுகிறது. இம் மூன்று பலன்களும் ஒருங்கே பெற்றவர்கள் தான் முழுமனிதர்கள். மாசு படிந்த உள்ளங்களின் மாசுக்களை அகற்றி தெய்வீகத்தை உள்ளத்திலே ஊட்டி இறைபலத்தை அதிகரிக்கச் செய்வதற்கு விரதம் பண்டிகை என்பன அவசியமாகிறது.

"உள்ளத்திலே உண்மை ஒளி உண்டாயின்
வாக்கினிலே ஒளி உண்டாம்" - எனப் பாரதி கூறினான். உள்ளத்திலே இறையொழி இருந்தால்தான் எண்ணி எண்ணம் ஈடேறும்.

மானிடரின் வாழ்வியலிலே ஆன்மீகத்தை ஊட்டுவதும் அறத்தை வளர்ப்பதிலும் ஆலயமே பிராதன இடத்தை வகிக்கிறது. விரதங்கள் பண்டிகைகளின் சிறப்பிற்கும் வரப்பிரசாதத்திற்குரிய ஆலயங்கள் தெய்வீகம் நிறைந்த அழகு கூடமாகத் திகழ வேண்டும்.

இந்த வகையில் கந்தளாய் கட்டளைப் பிள்ளையாரின் ஆலய நிர்மான வேலைகள் நிறைவுற்று கும்பாபிஷேகம் நடைபெறுவது விநாயகரின் திருவருள். ஆனை முகத்தான் அனைவர்க்கும் வேண்டும் என பிரார்த்திக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோப்புக்கரணம்

பிரம்ம ஸ்ரீ வேதாகமமாமணி
சோ. இரவிச்சந்திரக் குருக்கள்

நமது உள்ளங்காலிருந்து தலையுச்சிவரை அநேகம் நரம்புக் கற்றைகள் உள்ளன. நாம் சுறுசுறுப்பாக அடிக்கடி உட்காரந்து எழுந்திருந்தால் (தோப்புக் கரணத்தால்) அந்த நரம்புக் கற்றைகள் சுருங்கிச் சோர்வடையாமல், இரத்தம் நன்கு பாய்ந்து மூளைக்கு பலம் கொடுக்கும். அந்த இரத்தம் மூளைக்குச் சென்றால், மனதில் சாந்தமான நினைவுகள் மலரும்.

நாம் தோப்புக்கரணம் போடும் போது உடல் அசைவில் சுஷீம்னா என்ற நாடி தட்டி எழுப்பப்படுகிறது. இரு கரங்களில் நெற்றிப் பொட்டுக்களில் குட்டிக் கொள்ளும் போது ஸஷஸ்ராரம் என்ற இடத்திலிருந்து யோகிகளுக்கு அமிர்தம் சிந்தும், விநாயக உபாஸனையி மூலம் சுஷீம்னா நாடி, அமிர்தகலசம் இரண்டும் ஒருங்கே இயங்குவதால் பூரண பலன்களை அடைய முடிகிறது என்பர்.

எந்தத் தேவதையை வணங்கத் தொடங்கினாலும், முதல் விநாயகரை தியானித்து சுக்லாம் பரதரம் என்ற ஸ்துதியை கூறி வெற்றியில் குட்டிக் கொண்ட பின்னரே வணங்க வேண்டும். இவ்வாறு குட்டிக் கொள்வதால் ப்ரம்மரந்த்ரத்தில் அமிர்தம் பெருகி நாடிகளில் பாய்ந்து உபாசகர்களுக்கு சோம்பல் முதலிய அவகுணங்களை விரட்டி நல்ல மனநிலையை அளிக்கிறது.

மூலக்கனல் என்று சொல்லப்படுவதே சுஷீம்னா நாடி. இது மனித சரீரத்தில் அடி வயிற்றின் கீழ் ஓங்கார ரூபத்தில் அமைந்து செயலாற்றுகிறது. இதைத் தட்டிச் செயல்படுத்தி மேல் நோக்கி சிரஸிலிருக்கும் அமிர்தத்துடன் கலந்து அவ்விடமே அதை நிலைநிறுத்திக் கொண்டால் மனிதன் தன் நிலை மறந்து ப்ரும்மத்துடன் ஐக்கியப்பட்டு நிற்பான். பேரானந்தத்தைக் காண்பான். இந்த நாடியைச் செயற்படுத்துவதற்கு - தட்டி எழுப்புவதற்கு மூலாதாரத்தில் அளவில்லாத உஷ்ணத்தை உண்டு பண்ண வேண்டும். அதற்கு மனதை ஒரே நிலையில் ஐக்கியப்படுத்தி, நெடுங்காலம் ஜபதபங்கள் புரிய வேண்டும். அதிக உஷ்ணமான பொருட்களை உபயோகித்து பூஜை முதலியன புரிதல் மறைமுகமாக யோகத்தீமூட்டு என்று உணர்த்தவேயாகும்.

மூலாதாரத்திலுள்ள சுஷம்னா நாடி கணபதி என்பதாலே நமது ரிஷிகள், சாஸ்திர விற்பனர்கள் ஆகியோர் தாவர வர்க்கத்திலேயே மிக மிக உஷ்ணமான அறுகம் புல் வெள்ளெருக்கு, வன்னிப்பத்திரம் ஆகியவை கணபதி பூசைக்கு உகந்தவை எனக் கூறியிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. நெற்றிப் பொட்டில் குட்டிக் கொண்டு தோப்புக்கரணம் போடுவதையும் விநாயக வழிபாடு மரபாக அமைத்துள்ளார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குட்டிக்கொள்ளல்

திருமுருக கிருபானந்தவாரியார்
சுவாமிகள்

முனிவர்களுள் முதல்வராகிய அகத்திய முனிவர் சிவபெருமானிடம் இருந்த காவிரி நதியைக் கமண்டலத்தில் அடக்கிக் கொண்டு தென்திசை நோக்கி வருவாராய் குடகு மலையில் சிவபூசை செய்து கொண்டு இருந்தார்.

அப்போது இந்திரன் சீகாழியில் பூசை செய்து கொண்டிருந்தான். மழையின்றி நந்தவனம் வாடியது.

நாரத முனிவர் இந்திரனைப் பார்த்து "அகத்தியருடைய கமண்டலத்திலுள்ள காவிரி பெருகுமானால் உன் பூங்கா பொலிவு பெறும்" என்று கூறினார்.

இந்திரன் விநாயகரை வழிபட்டு வேண்டிக் கொண்டான். விநாயக மூர்த்தி காக்கை வடிவுடன் சென்று காவிரியடங்கிய கமண்டலத்தின் மீது அமர்ந்தார். அகத்தியர் காகத்தை கரத்தால் ஓட்டினார். காகம் உந்திப் பறந்தது. கமண்டலம் கவிழ்ந்து காவிரி பெருக்கெடுத்து ஓடியது.

அகத்தியர் காகத்தின் மீது சீறிப்பாய்ந்தார். அது அந்தணச் சிறுவனாகி நின்றது. அச்சிறுவனை இரு கரங்களாலும் குட்டும் பொருட்டு குறுமுனி ஓடினார். பிள்ளையார் அவருக்கு அகப்படாமல் அங்கும் இங்குமாக ஓடினார். அகத்தியர் அச்சிறுவனை அணுகிக் குட்டுவதற்கு இரு கரங்களையும் ஓங்கினார். ஐங்கரங்களுடன் விநாயகர் காட்சி தந்தருளினார். அகத்தியர் திகைத்து நடுநடுங்கினார்.

"ஓங்காரப் பொருளே!" வேத வித்தகனே! உன்னைச் சிறியேன் அறியேனாகிக் குட்டுவதற்குக் கையை ஓங்கினேனே. என்னே என் சிறுமதி "என்று தன் சென்னியிலேயே குட்டிக் கொண்டார். விநாயகர் அவருடைய கரங்களைப் பற்றிக் கருணை புரிந்தார்." "இன்று முதல் நம் திருமுன் பயபக்தியுடன் சென்னியில் குட்டிக் கொண்டோர் கூரிய மதியும், சீரிய நிதியும் பெறுவார்கள்" என்று வரமளித்தருளினார். இதனால், விநாயகரின் திருமுன் அடியார்கள் சிரத்தில் குட்டிக் கொள்ளும் மரபு உண்டாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டளைப் பிள்ளையாரின் கட்டளைகளை தொடர்ந்து கடைப்பிடிப்போம்

கனகசபை தேவகடாட்சம்
(மல்லிகைத்தீவு – கொட்டியாரப்பற்று)
திருக்கோணமலை.

'மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார் (குறள் 03)'

இவ் வள்ளுவத்தின் படி இப்பூமியில் நீடூழி வாழ்பவர்கள் இறைவனின் திருவடிகளை நினைப்பவர்கள் என்ற உண்மைக்கும் மேலாக, காலம் காலமாக நினைக்கவைப்பவர்களே மேலானவர்கள் என்பது என் எண்ணம். அதாவது, இக் கட்டளைப்பிள்ளையார் ஆலயத்தை சமூக பல இறுக்கங்களுக்கும் மத்தியில் புனர் நிர்மாணம் செய்து கும்பாபிஷேகம் வரை கொண்டு வந்துநிறுத்திய இவ் ஆலய பரிபாலன சபை, வாழ்த்துக்களுக்கும், பாராட்டுதல்களுக்கும் உரியவர்கள் ஆவார்கள். இறை ஆசீர்வாதம் இப்பரிபாலன சபைக்கும், இவ்வாலய உயர்வுக்காய் உழைத்த அனைவருக்கும் உரித்தாகும் என் பதில் எள்ளளவும் ஐயமில்லை.

இந்து தமிழ் மக்கள் செறிந்து வாழும் இடங்களில் சமயப்பணி இலகுவானது. ஆனால் பல் சமூக அமைப்பினுள் இப்பணி கடினமானது. எத்தனை சிரமம்? எத்தனை விமர்சனங்கள்? எத்தனை கெடுபிடிகள்? இத்தனை தடைகளையும் தாண்டி பணியை செவ்வனே நிறைவேற்றுவதென்பது கற்பனை செய்யமுடியாதது. இத்தோடு, கந்தளாய் வாழ் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட குளம் உடைப்பு, அதனோடு இணைந்த நாட்டு வன்முறைகள்! இச் சோகங்களால் பாதிப்படைந்த பெரும் உழைக்கும் வர்க்கம் வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழ்ந்து கொண்டிருக்கிறது. இந்து மக்கள் இணைந்து இத்தகைய பெரும் பணி செய்தமை, ஆன்மீக உணர்வுகளுக்குமப்பால் தமிழ்தேசியத்தின் வரலாற்று மீது கொண்டிருக்கும். பற்றுதி என்பதை உணர்ந்து கொள்ளல் அவசியமாகும். திருக்கோணமலை எல்லையில் அமைந்த கந்தளாய் தமிழர்களின் பூர்வீக மண் என்பதை சுட்டி நிற்பதற்கு கட்டளைப்பிள்ளையார் ஆலயம் மிகப்பெரிய சாட்சியாக அமைகிறது.

இலங்கைத்தீவிற்கு ஒரு வரலாறு எழுதவேண்டுமாயின் தமிழரை தொடாமல், அவர்களின் பூர்வீகத்தை வெளிக்கொண்டு வராமல் எதுவுமே எழுத முடியாது.

தமிழை வளர்பதற்காவும், அறிவியல் சார்பாக அறிவதற்கும் தமிழர்கள் 'சங்கம்' அமைத்தனர். கடல்கோள் ஏற்படுவதற்கு முன் குமரிக்கண்டம் முழுவதும் தமிழ் பரந்திருந்தது. இலங்கைத்தீவும் இதனுள்ளே அடங்கி இருந்தது கடைசியாக அமைக்கப்பட்ட 'சங்கம்' (கடைச்சங்கம்) இற்றைக்கு 3700 வருடங்களுக்கு முன்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போதய மதுரையில் (தமிழ்நாடு) உருவாக்கப்பட்டிருந்தது. 16 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் தலைச்சங்கம் தென்மதுரையில் இருந்தது. ஈழதேசத்தைத் சேர்ந்த 'ஈழத்துப்பூதந்தேவனார் தமிழ்சங்கத்தில் ஒரு சங்கப்புலவராவார். இதிலிருந்து இலங்கைத்தீவின் தமிழரின் வரலாற்றுத்தொன்மையை இலகுவாக கணித்துக் கொள்ளலாம். இதை குறிப்பிடுவதன் நோக்கம் யாதெனில் இலங்கையில் ஈழத்தமிழ் மக்கள் நீண்ட பெரும் வரலாற்றை கொண்டவர்கள் என்பது தான். எத்தனையோ ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்னர் திருக்கோணேஸ்வரம் உருவாகியிருக்கிறது. (திரேதகாலத்திற்கு முன்) ஈஸ்வர வணக்கங்கள் தமிழருடையது. அதே காலங்களில் தொடர்புடைய பிராமண குடியிருப்பு (பிரதேயம்) என பெயர் கொண்ட இடம் தான் 'கந்தளாய்' ஆகும். இக்கந்தளாய் தமிழர் பூமி. கால நகர்வில் இலங்கையின் வரலாற்று பூர்வீகதமிழ் இடங்கள் பறிபோன விந்தையை நான் சொல்வது ஒரு புதிய செய்தியல்ல!

இருப்பினும், வரலாற்று எச்சங்கள் எங்கோ ஒரு மூலையில் எஞ்சியிருந்து உரிய காலத்தில் வெளிப்படுவது கோணேசப்பெருமானின் திரு அருள் எனலாம். அதை நாம் (தமிழர்) எப்படி பயன்படுத்தப்போகிறோம்? இதனூடாக தமிழரின் பூர்வீகத்தை எப்படிக் கொண்டவரப்போகிறோம்? நாதியற்றவர்காளக, அடிமைகளாக தமிழர் வாழ வேண்டியவர்கள் அல்ல என்பதை கொண்டுவரப்போகிறோமா? தமிழர்கள் இந்நாட்டின் உரிமையாளர்கள் என்பதை தெளிவுபடுத்தப்போகிறோமா?

இவ்விடயங்களில் தான் எதிர்கால இளைஞர்களின் வகிபாகம் மிகமிக அதிகமாக உள்ளது. இன்றும் கூட என்நினைவில் நிற்கிறது!

ஏறத்தாழ 45 வருடங்களுக்கு முன் எனது சொந்தப்பூமியில் வாழ்ந்த மூதாதையர்கள் கந்தளாய் கட்டளைப்பிள்ளையார் ஆலயம் பற்றியும், குளக்கோட்டன், குளம், பூதங்களின் செயற்பாடு போன்ற பல கதைகளை கூறக் கேட்டிருக்கிறேன்.

கலியுகம் பிறந்தது 517ம் ஆண்டில் மகாவலி கங்கை நீரை தேக்கி பெரிய திருக்குளம் கந்தளாயில் குளக்கோட்டன் எனும் சோழ மன்னால் கட்டப்பட்டது. அப்போது அவனால் பிள்ளையார் ஆலயம் ஒன்று அமைக்கப்பட்டு முதலில் விநாயகரை வழிபட்டு பின்னர் பணிகளை ஆரம்பிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தினான். விவசாயிகளின் விதைப்பு, அறுவடைகாலங்களில் நேர் கடன் நடைபெறும். மழை, வெயில் தேவைப்படும் காலங்களில் உரிய நேர்கடன் செய்வர். மழை வேண்டும் போது பச்சைப்பட்டும், வெயில் வேண்டும் போது சிவப்புப்பட்டும் நேர்ந்து தம்பலகாமம் கோணேசர் ஆலயத்திலிருந்தும், பச்சைப்பெட்டி, நில பாவாடை விரித்து நடையாக கந்தளாய் கட்டளைப்பிள்ளையார் பாதங்களில் வைத்து இரவு முழுவதும் பூஜையில் ஈடுபடுவார்கள். விளை நிலங்களின் செழிப்புக்காக கந்தளாய் வேள்வி, நாயன்மார் திடல் வேள்வி, மல்லிகைத்தீவு வேள்வி போன்ற பல வேள்விகள் நடைபெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாள் உதயத்தின் போது அதனை எடுத்துச்சென்று கந்தளாய் குளத்தில் அதற்கென உரிய இடத்தில் அப்பட்டை சாற்றி பிரார்த்தனை செய்வார்கள். உரிய பலனும் விவசாயிகளுக்க கிடைக்கப்பெற்று மகிழ்வடைவார்கள் (பச்சைப்பெட்டி கொண்டு வருதல் ஈச்சிலம் பற்று செம்பகநாச்சியம்மன் ஆலயத்திலிருந்தும் வந்ததாகவும் ஒரு தகவல் உள்ளது) இப்பேர்ப்பட்ட இவ் வரலாற்று ஆலயம் மீண்டும் புத்துயிர் பெறுவது நாம் அனைவரும் பெருமை கொள்ள வேண்டிய விடயமாகும். இதில் முக்கியமானது என்னவென்றால், இவ்வரலாறு தூர்ந்து விடாமல் அனைத்து தமிழ் கிராமங்களையும் ஒன்றிணைக்க வரலாற்று முக்கியம் வாய்ந்த பச்சைப்பெட்டி கொண்டு வருதலும், பட்டுச்சாத்தலும் மீண்டும் ஏற்படுத்த வேண்டும். இது ஆலய பரிபாலன சபையின் ஒரு கடமையும் என கருதுகிறேன். இதற்கு சமூகத்தின் ஒத்துழைப்பும் மிக அவசியம். மேலும்,

இவ் வாலயத்தின்பால் அக் காலங்களில் நடைபெற்ற நிகழ்வுகளை இக்கால சந்ததியினரோடு இணைந்து நடாத்தவேண்டும். அவை 'கர்ணபரம்பரை' கதைகள் என தள்ளிவைக்காமல் எமது கலாசார நிகழ்வு என அறிதல்வேண்டும். அப்போது தான் தமிழரின் வரலாற்று உண்மைகளை ஏனைய சமூகத்திற்கும் தெளிவுபடுத்தலாம்.

'எந்த சமூகம் தம் வரலாற்றை அறிய மறுக்கிறதோ அச்சமூகம் விரைவில் அழிந்துவிடும்' என கடந்தகாலங்களில் வாழ்ந்த தலைவர்கள் கூறியுள்ளார்கள். எனவே,

திருக்கோணமலை மாவட்ட இந்துமக்கள் அனைவரும் ஒன்றிணைந்து பாரம்பரிய பண்பாடுகளுக்கு உயிர் கொடுப்போம். இதுவே எம்மை தற்காத்துக் கொள்ளும் ஆயுதமாகும். இதன் முதல் படியில் அடிஎடுத்து வைத்திருக்கும் கட்டளைப்பிள்ளையார் ஆலய வழிபாட்டு முறைகள் போற்றுதற்குரியதாகும். இவ்வாலய கும்பாபிஷேகம் சிறக்க அம்மலருக்கு ஆக்கம் தருவதற்கு வாய்ப்பளித்த கௌரவ செயலாளர் உள்ளிட்ட ஆலய பரிபாலன சபையினர் அனைவருக்கும் நன்றி கூறாமல் இருக்க முடியாது.

எதிர்வரும் காலங்களில் இவ்வாலயத்தை தொடர்க்கப்புள்ளியாகக்கொண்டு ஒன்றிணைவோம். வரலாற்றை சொல்லுவோம். எமது பாரம்பரியத்தை எமது எதிர்கால சந்ததியினரிடம் செவ்வனே ஒப்படைப்போம்.

மொழியும், நிலமும் எமது இரு கண் என்பது எம் அனைவர் மனங்களிலும் மாறாத தடங்களாக இருக்க வேண்டும்.

ஆனை முகன் ஆசி அனைவருக்கும் கிடைப்பதாகுக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது பார்வையில்
# கந்தளாய்ப் பிள்ளையார் ஆலயத்தின் பின்னணி

ஆ. சண்முகராஜா
செயலாளர்

தமிழரின் வரலாற்றை ஆய்வு செய்வதென ஆரம்பித்தால் திருக்கோணேஸ்வரம் சார்ந்த திருக்கோணமலையை அடித்தளமாக கொண்டு அதிலும் கந்தளாயின் வரலாற்றைத் தொடாவிடின் பூரணமாகாது.

வரலாற்றுப் பூமியான கந்தளாய் வரலாற்றை சொல்ல முற்படுவது கந்தளாய் தி/விக்னேஸ்வரா வித்தியாலயத்திலும் இச் ஆலயத்தின் கௌரவ செயலாளராகவும் பணியாற்றிய 25 ஆண்டுகளில் பெற்ற அனுபவங்கள் நிச்சயமாக போதாது என்பதை அறிவேன். இருப்பினும் "கந்தளாய் என்ற வரலாற்றுக்" கடலில் ஒரு சிறங்கை (கையளவு) நீர் அள்ளுவது போலாகும்.

கந்தளாய் இயற்கையழகு நிறைந்த சைவக் கிராமம். திருக்கோணமலைப் பட்டணத்திலிருந்து கண்டிக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் முப்பத்தொன்பது (39) கிலோ மீற்றர் தூரத்தில் ஒரு கிளைப்பாதை பிரித்து குளக்கோட்ட மன்னனால் கட்டப்பெற்ற சிறப்பு மிக்க குளத்தின் அருகே செல்கின்றது. இதில் இருந்து 300 மீற்றர் தூரத்தில் கட்டளைப் பிள்ளையார் ஆலயம் அமைந்துள்ளது.

இவ்வாலயமானது திருக்கோணேஸ்வரத்தோடு தொடர்புடைய வரலாற்றுகளை நோக்கும் போது தம்பலகாமம் ஆதிகோணேநாயகர் ஆலயத்தோடும் குளக்கோட்டு மன்னனால் கட்டப்பெற்ற குளத்தோடும், குளத்தின் அருகில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் பத்தினி அம்மன் ஆலயத்தோடும் தொடர்புள்ளதை அறிய முடிகிறது.

கந்தளாயின் சிறப்பு சோழர் காலம் என்று கூறலாம். சனநாதமங்கலம் என அழைக்கப்பட்ட இன்றைய பொலநறுவையை தலைநகராகக் கொண்டு மும்முடி சோழ மண்டலம் என இலங்கைக்கு பெயரிட்டு ஆண்டகாலம் பொலநறுவையில் அமைந்த சிவ ஆலயங்களும் பயிர்செய்கை நிலங்களும் தமிழர்களுக்கு அரசர்கள் வழங்கி பாதுகாப்புக்காக தமிழ் குடியிருப்புக்களை அமைத்தனர். இந்த வடிவத்தில் திருக்கோணேஸ்வரத்திலும் தம்பலகாமத்திலும் ஆலயத் திருப்பணிகள் நிகழ்ந்தன. மானியங்களாக பயிர்செய் நிலங்கள் வழங்கப்பட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பலகாமப் பற்றுக்குள் கந்தளாயும் அமைந்ததால் முற்றிலும் தமிழர் நிலமாவே இருந்தது. இதற்கான கல்வெட்டுக்கள், கந்தளாயின் நெடுநாள் வாசிகள் ஊடாக ஆதாரங்கள் ஏராளமாக உண்டு.

ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தர் தெட்சணகயிலாயம் எனப்படும் திருக்கோணேஸ்வரத்தை பற்றி தேவாரப் பதிகம் பாடித் துதித்துள்ளார். இப்புகழ்மிக்க கோணேசர் கல்வெட்டின் பிரகாரம் குளக்கோட்டு மன்னன் கலியப்தம் 522ஆம் ஆண்டில் கோணேசர் கோயில் திருப்பணியையும் 526 ஆம் ஆண்டில் கந்தளாய்க் குளத்தைக் கட்டும் பெரும் பணியையும் செய்து நிறைவேற்றியதாக மேலும் அச்சான்றுகள் காணப்படுகின்றன.

இந்த நாட்டுத் தமிழ் மக்களின் வரலாற்றும் தொன்மையும் அவர்கள் கண்ணெனப் பேணும் சிவ நெறியில் தொன்மையையும் இவ்வாலய வரலாறு பறைசாற்றும். வயலும் வயல் சார்ந்த நில வளமும் நீர் வளமும் மிக்க மருத நிலமாம் கந்தளாய் சோற்றுடைந்த என்பர் கட்டளைப் பிள்ளையார் இங்கே இம் மருத நிலத்து தெய்வமாகப் போற்றப்படுகிறார்.

இக் கோயிலில் நிகழும் அற்புதங்கள் தனித்துவமானவை. தனியார் வாழ்வில் மட்டுமன்றி சமூக ரீதியான அற்புதங்களும் இங்கு நிகழ்ந்தன.

ஊர் வயல்களுக்கு நீர் தேவைக்கடும் போது விதிப்படி பொங்கலையும் வேள்விகளையும் செய்து கட்டளைப் பிள்ளையாருக்கு பச்சைப் பட்டுக் கட்டி மழை பெய்வது நீர் மிகுந்து பைங்கடல் பாதிப்புறும் போதுகட்டளைப்பிள்ளையாருக்கு சிவப்பு நிறப் பட்டும் சாத்தி வெய்யில் காய்வதும் கந்தளாய் மண்ணில் இன்னும் நிகழும் சமூக ரீதியான அற்குதமாகும்.

ஐம்பதுகளின் பிற்பகுதியில் கந்தளாய்க் குளம் பெருக்கெடுக்கும் ஆபத்து ஏற்பட்டது. ஊர் மக்கள் செய்வதறியாது திகைத்த வேளை அது கந்தளாய்க்குளம் எந்த எந்த நேரம் பெருக்கெடுக்குமோ? என்னவாகுமோ? ஏதுவாகுமோ? என்று மக்கள் அங்கலாய்த்துக் கொண்டிருந்த வேளை அப்போதுதான் அந்த அற்புதம் நிகழ்ந்தது.

கோயில் தொழும்பாளர் கட்டுத்துப்பாக்கியை எடுத்து தங்கக் குண்டு இட்டு கந்தளாய் குளத்தினுள் இறங்கி கழுத்தளவு தண்ணீரில் நின்றவாறு தங்கக் குண்டினைக் குளக்கோட்ட மன்னனின் நியதிப்படி சுட்டார். என்ன ஆச்சரியம்! நீர் வற்றியது. கந்தளாய்க் குள உடைப்பும் பெருக்கெடுப்பம் தடுக்கப்பட்டது. ஊர் மக்களின் அச்சம் நீங்கியது. கட்டளைப் பிள்ளையாரின் அருளினை நினைத்து இன்றும் மெய்சிலிர்ப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுமட்டுமன்றி கி.பி. 1132 - 1153 காலப்பகுதியில் ஆட்சி செய்த கஜபாகு மன்னன் சமயப் பொறாமை காரணமாகச் சீற்றம் அடைந்து கோணேஸ்வரம் நோக்கிப் படையெடுத்து வந்த கஜபாகு வழியில் கர்வத்தினால் தன் கண்பார்வையை இழந்தான். பதறிப்போனான். பின்னர் தன் தவறை உணர்ந்து மனம் நொந்து இறைவனைப் பக்தியால் ஏத்தினார். பிராமணர் வடிவில் தோன்றிய கட்டளைப் பிள்ளையார் கொடுத்த திருநீற்றினைச் சாத்திய கஜபாகு மன்னன் மீண்டும் கண்பார்வை பெற்றான். இதனால் கஜபாகு மன்னன் தான் கண்பார்வை பெற்ற இடத்தை கண்தளைத்த என்று பெயரிட்டான். இந்த ஊரே திரிபுற்று கந்தளாய் ஆயிற்று.

இன்றும் பிள்ளையாரின் ஆலயத்தில் நாகதம்பிரானின் அற்புதம் நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றது. ஆலயத்தின் வெளிவீதியில் நாகதம்பிரான் தனக்கொரு இடத்தை அமைத்து தனித்துவமான நிகழ்வுகளை நிகழ்த்தி வருகின்றார். விஷம் தீண்டப்பட்டவர்கள் நாகதம்பிரானின் தலையில் விஷம் தீண்டிய கடிவாயை வைத்தும் விஷம் முழுமையாக இழுக்கப்பட்டு விடும். பின்னர் பசும்பால் தேங்காய்ப்பால் நாகதம்பிரானுக்கு ஊற்றி தங்கள் நிறைவை நிறைவேற்றிக் கொள்வார்கள்.

1986ஆம் ஆண்டு தமிழனின் தலைவிதியோ அல்லது சதியோ தெரியாது குளங்கோட்டு மன்னனால் கட்டப்பட்ட குளம் உடைக்கப்பட்டு ஆலயம் முற்றாக அழிக்கப்பட்டு மனித உயிர்கள் பறிக்கப்பட்டன. அனைத்து வீடுகளும் இருந்த இடம் இல்லாமல் முற்றாக அழிக்கப்பட்டது. அது மட்டும் இன்றி கால்நடைகளும் அழிக்கப்பட்டன.

பலஆயிரக்கணக்கான ஆண்டுகளாக பரம்பரையாக வாழ்ந்து வந்த கந்தளாய் பூர்வீக தமிழர்கள் இந்த பேரழிவின் பின்னர் வறுமையடைந்து சொந்த நிலங்களில் இருந்து இடம் யெர்ந்தார்கள். மீகுதியானவர்கள் ஏனையோரிடம் கையேந்தி வாழும் நிலைக்கு தள்ளப்பட்டார்கள். இதுதான் இன்றைய தமிழனின் நிலையாகி விட்டது.

தமிழனின் வரலாற்றையும் இருத்தலையும் கூறுவது சைவ ஆலயங்களுக்கு பெரும் பங்குண்டு. அந்த வழியில் நெருக்கடிக்குள் சிக்கியிருக்கும் கட்டளைப் பிள்ளையார் ஆலயத்தை ஒரு கட்டமைப்பிற்கு கொண்டு வந்து எதிர்கால தமிழர்களின் வாழ்வுதனை சிறப்புறத் தீர்மானிக்க வேண்டிய பொறுப்பு அனைத்து தமிழர்களின் கட்டாயக் கடமை என்பதை நான் கூற விரும்புகின்றேன்.

கந்தளாய் வாழ் தமிழ் மக்களின் எதிர்கால நலனை நோக்காக் கொண்டு சமூக உணர்வு கொண்டவரை ஆலய நிர்வாகத்துக்குல் உருவாக்க வேண்டும். பாடசாலைக் கல்வியும், சமய அறிவும் ஆலய நிர்வாகத்தினால் மேன்படுத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்விடத்தில் இணைத்து வாழ்ந்து கொண்டு இருக்கும் ஏனைய சமூகங்களுடன் பேதங்கள் எதனையும் கொள்ளாமல் சமூக ஒற்றுமையுடன் எமது மதத்தின் மகிமையும் எமது இனத்தின் தொன்மையையும் தெளிவாக கூற வேண்டும். இதனால் தமிழரின் அந்தஸ்து எதிர்காலத்தில் சோரம் போகாமல் தலை நிமிர்ந்து வாழ முடியும் எனக் கருதுகின்றேன். இதற்கான சகல ஒத்துழைப்புக்களையும் உலகத்தில் பரந்து வாழும் அனைத்து சமூகங்களிடமும் வினையமாக வேண்டி நிற்கின்றேன்.

அத்துடன் போசகர் வ.இ. லோகானந்தம், தலைவர் திரு. S.D. பாலதேவன், செயலாளர் திரு. ஆ. சண்முகராஜா, பொருளாளர் திரு. G. சந்திரமோகன், ஆகியோர் கொண்ட நிர்வாக சபையின் தலைமையில் 1999ஆம் ஆண்டு புதிய கோயில் கட்டப்பட்டு மஹாகும்பாபிஷேகம் வேதாகமமாமணி பிரம்பஸ்ரீ சோ. இரவிச்சந்திரக் குருக்கள் தலைமையில் நடந்த போது நான் பெரிதும் மகிழச்சியடைந்தேன். தொடர்ந்தும் 16 வருடங்களுக்கு பின்னர் மீண்டும் ஆலயம் புனராவர்தனம் செய்யப்பட்டு இன்று குடுமுழுக்கு விழா காணும் போது எனது மகிழ்ச்சி மேலும் பன்மங்காகின்றது. பல்லின சமூகம் வாழும் கந்தளாய்ப் பிரதேசத்தில் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் முகமாக ஆலயத் திருப்பணிகளுக்கு முன்னின்று உழைக்கும் பரிபாலன சபையினருக்கும், அன்பர்களுக்கும், பொதுமக்களுக்கும், ஆலயக் கட்டிட அமைப்பு வேலைகள் சிற்பவேலைகள் திரு. செ. சுதேஸ்குமார் குழுவினர்களுக்கும், வர்ணக் கலை குழுவினர் திரு. து. ஜெகதீஸ்வரன் அவர்களுக்கும் எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் கூறுகின்றேன். கும்பாபிசேக வைபவம் சிறப்புற அமையவும், கட்டளைப் பிள்ளையாரின் பெருங்கருணை அனைத்து அடியார்களுக்கும் தொடர்ந்து கிடைக்கவும் விக்னேஸ்வரப் பெருமானை வேண்டி நிற்கின்றேன்.

நன்றி

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க.

# கும்பாபிஷேக கட்டிட நிதி தந்தவர்களின் பெயர் விபரம்

| இல | பெயர் | பணம் |
|---|---|---|
| 01 | இரா. சம்பந்தன் ப.உ (பன்முகப்படுத்தப்பட்ட நிதி) | 498,000.00 |
| 02 | M.K.D.S. குணவர்த்தன பா.உ (பன்முகப்படுத்தப்பட்ட நிதி) | 469,000.00 |
| 03 | R.G. இராஜேஸ்வரன்<br>மேற்படி நிதியில் 400,000.00 செலவில் அலுவலகக் கட்டிடம் அமைக்கப்பட்டுள்ளது. | 500,000.00 |
| 04 | திருமதி. சந்திரவதனி கங்காதரன் குடும்பம் (சரஸ்வதி, லட்சுமி சிலைகள்) | 300,000.00 |
| 05 | R.N. வரதன் குடும்பம் (தரை ஓடு) | 200,000.00 |
| 06 | V.R. சோமானந்தன் | 175,000.00 |
| 07 | V.R. லோகானந்தம் | 175,000.00 |
| 08 | A. லிங்கபரதன் | 136,000.00 |
| 09 | டாக்டர் மகேஸ்வரி மகேந்திரா UK | 132,107.00 |
| 10 | J. பரமேஸ்வரன் | 115,000.00 |
| 11 | M. கிருபராசா | 105,000.000 |
| 12 | ராஜேஸ்வரி புஸ்பராசா | 100,000.00 |
| 13 | சாந்தகுமார் சஜீத் | 100,000.00 |
| 14 | சித்திரவேல் சிறிரங்கநாதன் UK (லிங்கம், சண்டேஸ்வரர் சிலை) | 51,000.00 |
| 15 | T. பாக்கியராசா | 50,000.00 |
| 16 | W. உபாலி வீரசிங்க | 46,000.00 |
| 17 | S. ஆனந்தலிங்கம் | 40,000.00 |
| 18 | பிரதீபன் குடும்பம் (மின் மேளம்) | 40,000.00 |
| 19 | P. கஜந்தன் | 25,000.00 |
| 20 | றோயல் இன்டரீஸ் | 25,000.00 |
| 21 | R.S. ரமணிதரன் (அம்பாள் விக்கிரகம்) | 25,000.00 |
| 22 | டாக்டர் செல்வி துஸ்யந்தி சோமானந்தன் | 25,000.00 |
| 23 | ந. சுரேஸ்குமார் (தீர்த்தக்கல்லு) | 25,000.00 |
| 24 | T. அனோஜன் | 20,000.00 |
| 25 | K. ரவிராஜ் | 20,000.00 |
| 26 | K. கோபியாஸ் | 20,000.00 |
| 27 | பொறியியலாளர் R. நிசாந்தன் | 18,000.00 |
| 28 | S. கந்தசாமி | 15,000.00 |
| 29 | பாவேந்தன், பாமினி | 15,000.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | பெயர் | பணம் |
|---|---|---|
| 30 | A. சண்முகராசா | 15,000.00 |
| 31 | D.G.W. குமார | 13,000.00 |
| 32 | R. அம்பிகா | 12,000.00 |
| 33 | T. தனுஷன் | 11,500.00 |
| 34 | V. வசந்தகௌரி | 10,000.00 |
| 35 | V. சிவலிங்கம் | 10,000.00 |
| 36 | P. மயூரன் | 10,000.00 |
| 37 | R. லெவன் | 10,000.00 |
| 38 | சாந்தினி, கொஸ்தா | 10,000.00 |
| 39 | V. முத்துலிங்கம் | 10,000.00 |
| 40 | P. ராஜ்மனோகரன் | 10,000.00 |
| 41 | A. ஜீவானந்தன் | 10,000.00 |
| 42 | T. ரவிச்சந்திரன் | 10,000.00 |
| 43 | T. வரதராசா | 10,000.00 |
| 44 | N. சுந்தரலிங்கம் | 5000.00 |
| 45 | H.D.L. லீலாரட்ண | 5000.00 |
| 46 | N. சாந்தி | 5000.00 |
| 47 | திருமதி. சறோஜினி | 5000.00 |
| 48 | Y. தயாபரன் | 5000.00 |
| 49 | T. சஜிதா | 5000.00 |
| 50 | S. பிரபாகரன் | 5000.00 |
| 51 | S. சிவகுரு | 5000.00 |
| 52 | J. முரளிதரன் | 5000.00 |
| 53 | P. ஜோதிராஜா | 5000.00 |
| 54 | P. மதுமிலா | 5000.00 |
| 55 | P. சிவநாதன் | 5000.00 |
| 56 | S. ராஜ்குமார் | 5000.00 |
| 57 | V. கோணேஸ்வரி | 5000.00 |
| 58 | K. நிரோஜினி | 5000.00 |
| 59 | G. ஜெயச்சந்திரன் | 5000.00 |
| 60 | பஞ்சரட்ண | 5000.00 |
| 61 | S. சசிகாந் | 5000.00 |
| 62 | வைஸ்ணவி | 5000.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிஷேக கட்டிட நிதியாக பொருட்கள் தந்தவர்கள் விபரம்

**சீமெந்து**

| | | |
|---|---|---|
| P. கஜந்தன் | - | 97 பாக் |
| T. ரவிச்சந்திரன் | - | 40 பாக் |
| பொறியியளாளர் R. நிசாந்தன் | - | 25 பாக் |
| கருணாரட்ண | - | 10 பாக் |
| S. கோணேசலிங்கம் | - | 10 பாக் |
| T. பாக்கியராசா | - | 19 பாக் |
| கதிர்காமத்தம்பி | - | 10 பாக் |
| யோகாம்பிகை | - | 15 பாக் |

**மணல்**

| | | |
|---|---|---|
| பொறியியளாளர் R. நிசாந்தன் | - | 3 டிப்பர் |
| உபாலி | - | 1 டிப்பர் |
| N.G. திலக் | - | 1 டிப்பர் |
| T. பாக்கியராசா | - | 3 டிரக்டர் |

**புளொக்கல்**

| | | |
|---|---|---|
| S. விஜயராசா | - | 500 கல் |

**பெயின்ற்**

| | | |
|---|---|---|
| S. கந்தசாமி | - | 20 லீட்டர் |

**சல்லிக்கல்**

| | | |
|---|---|---|
| V. பிரதாபன் | - | 1 டிப்பர் |
| திணேஸ் | - | 2 டிரக்டர் |

**சிறுதுளி பெருவெள்ளம் என்பதற்கிணங்க சிறு தொகைகளையும், பொருட்களையும் மனமுவந்து உரிய நேரத்தில் வழங்கிய அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் எமது பரிபாலனசபை தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய கும்பாபிஷேக தினத்தன்று எடுக்கப்பட்ட நிழற்படங்கள்
(01.05.2015)









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயத்தால் இயம்புகிறோம்

இம்மலரை அழகுற உங்கள் கரங்களில் தவழ விடுவதில் பெரும் மகிழ்ச்சியும் ஆனந்தமும் அடைகின்றோம். இம்மலரை சிறப்பானதாக்க ஆக்கமும், ஊக்கமும் தந்த அனைவருக்கும், பல வழிகளில் நல் ஆலோசனைகள் வழங்கிய ஆலய நிர்வாகத்தினருக்கும், இக்கும்பாபிசேக மலரை ஒழுங்காக அமைத்து சிறப்புற வெளிவர உதவியமைக்கு திரு. கனகசபை தேவகடாட்சம் அவர்களுக்கும், இம்மலரை விரைவாகவும், அழகாகவும் அச்சிட்டு தந்தமைக்காக SS Digital's அச்சகத்தாருக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் இம்மலர் சிறப்புற வெளியிடுவற்கு தேவையான முழு நிதியையும் மனமுவர்ந்து தந்துதவிய வைத்திய கலாநிதி திருமதி. மகேஸ்வரி மகேந்திரா (U.K) அவர்கட்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது சார்பாகவும், எமது பரிபாலனசபை சார்பாகவும் எங்களது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவற்றுக்கு மேலாக மகாகும்பாபிஷேசம் திறம்பட நடைபெறவும் இம்மலர் சிறப்புற வெளிவரவும் அனுக்கிரகம் அருளிய விநாயகரின் ஆசி அனைவருக்கும் கிடைக்கவேண்டு மென்று பிரார்த்திக்கின்றோம்.



இவ்வண்ணம்
மலர் வெளியீட்டுக் குழு

வ.இ. லோகானந்தம் ஆ. சண்முகராசா பா. நிஜந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Printed By:
SS Digital's

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org